# வாழும் வரலாறு

# மல்லிகை ஜீவா



## முருகபூபதி

வாழும் வரலாறு மல்லிகை ஜீவா

முருகபூபதி

முகுந்தன் பதிப்பகம் – அவுஸ்திரேலியா

வாழும் வரலாறு மல்லிகை ஜீவா

முருகபூபதி

பதிப்புரிமை : மாலதி முருகபூபதி

முகப்போவியம் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

முதற்பதிப்பு : ஜனவரி **2022**

வெளியீடு : முகுந்தன் பதிப்பகம்

அவுஸ்திரேலியா

**No. 46, Alamein Street, Morwell , Victoria- 3840 , Australia .**

# முன்னுரை

இலங்கை யாழ்ப்பாணத்தில் சாதாரண மத்திய தரக் குடும்பத்தில் பிறந்து, உயர்கல்வியை பெறுவதற்குரிய வாய்ப்பு வசதிகளை இழந்து, அறிஞர்களினதும் முற்போக்கு எழுத்தாளர்களினதும் நூல்களை வாசித்துப்பெற்ற அனுபவங்களினாலேயே மேதையாக வலம்வந்து, ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு கடுமையாக உழைத்திருக்கும் மல்லிகை ஜீவா, **2021** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் **28** ஆம் திகதி கொழும்பில் தமது **93** வயதில் மறைந்தார்.

ஜோசப் – மரியம்மா தம்பதியருக்கு **1927** ஆம் ஆண்டு ஜூன் மாதம் **27**ஆம் திகதி பிறந்திருக்கும் டொமினிக் ஜீவா, மல்லிகை எனும் கலை, இலக்கிய மாத இதழை **1966** ஆம் ஆண்டுமுதல், **2012** ஆம் ஆண்டு வரையில் வெளியிட்டார். இதுவரையில் நானூறுக்கும் மேற்பட்ட இதழ்கள் வெளியாகியிருக்கின்றன.

இவ்விதழ்களை நூலகம் ஆவணகத்தில் பார்க்கமுடியும்.

டொமினிக் என்பது அவரது இயற்பெயர். தமிழகத்திலிருந்து பொதுவுடமை இயக்கத்தோழர் ஜீவானந்தம் பிரித்தானியர் காலத்தில் தலைமறைவாக இலங்கை வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவரது கருத்துக்களினால் கவரப்பட்ட டொமினிக், தனது பெயருடன் ஜீவா என்ற எழுத்துக்களையும் இணைத்துக்கொண்டார்.

மல்லிகை ஆசிரியராகவும் பதிப்பாளராகவுமிருந்து சுயமுயற்சியோடு அதனை வெளியிடத்தொடங்கியதும், **மல்லிகை ஜீவா** என பரவலாக அறியப்பட்டார்.

அவரது இந்த நாமம் இலங்கையெங்கும் மட்டுமல்ல தமிழகத்தில் இலக்கியவாதிகள் மத்தியிலும் பரவியிருந்தது.

இன்னும் சில வருடங்கள் வாழ்ந்திருப்பின் நூறுவயதையும் எட்டியிருப்பார்.

ஜீவா முதலில் சிறுகதை எழுத்தாளரகவே இலக்கிய உலகில் பிரவேசித்தவர். அவரது முதலாவது கதைத்தொகுதி **தண்ணீரும் கண்ணீரும்.**

அதற்கு இலங்கையின் தேசிய சாகித்திய விருது கிடைத்தது. அதுவே இலங்கையில் தமிழில் தேசிய மட்டத்தில் இலக்கியத்திற்காக அவ்வாறு கிடைத்த முதல்விருதுமாகும்!

விருதை வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் திரும்பிவருகிறார். ஊர்மக்கள் அச்சமயம் யாழ்ப்பாண மேயராக பதவியிலிருந்த துரைராஜாவின் தலைமையில் மாலை அணிவித்து அவரை வரவேற்றனர்.

யாழ்ப்பாணம்
கஸ்தூரியார் வீதியில் தந்தையாரின் ஜோசப்சலூனை கவனித்துக்கொண்டே இலக்கியப்பிரதிகளும் எழுதினார். கம்யூனிஸ்ட் கட்சியிலும் அங்கத்துவம் பெற்றிருந்தார். அடிநிலை மக்களுக்காக நடத்தப்பட்ட பல போராட்டங்களிலும் கலந்துகொண்டார்.

தண்ணீரும் கண்ணீரும் கதைத்தொகுப்பைத் தொடர்ந்தும் சிறுகதைகள் எழுதிய ஜீவா, பின்னர் பாதுகை, சாலையின் திருப்பம், வாழ்வின் தரிசனம்
முதலான தொகுதிகளையும் மேலும் சில நூல்களையும் வரவாக்கியவர்.

**சாலையின் திருப்பம்** தொகுதிக்கு அவரது நீண்ட கால நண்பர் ஜெயகாந்தன்
முன்னுரை எழுதியிருக்கிறார். தமிழகத்தின் சரஸ்வதி (1958), தாமரை (1968)
முதலான இதழ்களும் ஜீவாவின் உருவப்படத்தை அட்டையில் பிரசுரித்து அவரைப்பற்றிஎழுதி கௌரவித்திருக்கின்றன. குமுதம் இலவசஇணைப்பாக ஜீவாவின்
**அனுபவமுத்திரைகள்** கட்டுரைகளை மறுபிரசுரம் செய்து விநியோகித்திருக்கிறது.

ஒரு சிறுகதைஎழுத்தாளன்,பெரிய பொருளாதார வசதிகளோ, உயர்ந்தகல்விப்பின்புலமோ இல்லாமல் தொடர்ச்சியாக 45 ஆண்டுகளுக்கும் மேலாக மல்லிகை இலக்கிய இதழை நடத்தியிருக்கிறார் என்ற சாதனையும் இன்று
காலம் கடந்த செய்திதான்.

இலங்கை நாடாளுமன்றத்தில் விதந்துபேசப்பட்ட இலக்கிய வாதியான டொமினிக்ஜீவாவுக்கு அந்தப்பெருமையை பெற்றுக்கொடுத்ததும் அவரது அயராத முயற்சியினால் வெளியாகிக்கொண்டிருந்த மல்லிகைதான்.

யாழ். குடாநாட்டுக்குள்ளிருந்து முதலிலும் போர் நெருக்கடி தொடங்கிய1990இற்குப்பின்னர் கொழும்பிலிருந்தும் வெளியான அவரது மல்லிகை இதழில் இலங்கையின் அனைத்துப்பிரதேச எழுத்தாளர்கள் மட்டுமன்றி, தமிழகத்திலிருந்தும் புகலிட நாடுகளிலுமிருந்தும் பலர் எழுதினார்கள்.

மாதாந்தம்மல்லிகையை வெளியிட்டவாறே **'மல்லிகைப்பந்தல்'** பதிப்பகத்தின் மூலம் பல படைப்பாளிகளின் படைப்புகளையும் நூலுருவாக்கினார். விநியோகித்தார். அத்துடன் சிலபிரதேச சிறப்பிதழ்களையும் வெளிக்கொணர்ந்து மண்வாசனை இலக்கியத்திற்கும் வளம் சேர்ப்பித்தார்.

இலங்கையில் கலை, இலக்கியவாதிகளையும் இலக்கிய விமர்சகர்களாகத் திகழ்ந்த பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்களையும் ஆழமாக நேசித்து அவர்களது ஆக்கங்களுக்கும் சிறந்த களம் வழங்கினார்.

அத்துடன் தமிழ்நாட்டில் கண்ணதாசன், ஜெயகாந்தன், சிட்டி சுந்தரராஜன், பா. சிவப்பிராசம் , சோ. சிவபாதசுந்தரம், ' சுந்தா ' சுந்தரலிங்கம், மேத்தா, இன்குலாப், திலகவதி, சிவகாமி,ராஜம்கிருஷ்ணன், தொ.மு. சி. ரகுநாதன், செ. கணேசலிங்கன், பாலகுமாரன், சு. சமுத்திரம், அக்கினி புத்திரன், தமிழச்சி தங்கபாண்டியன், கு. சின்னப்ப பாரதி, செ. யோகநாதன், பொன்னீலன், கண.முத்தையா, அகிலன் கண்ணன், பா. ரவி, கவிஞர் அறிவுமதி, ரங்கநாதன், நர்மதா ராமலிங்கம், குணசேகரன், அறந்தை நாராயணன், தி.க. சிவசங்கரன், நா. வானமாமலை,பொன்னீலன், நீல பத்மநாபன், ஆ. குருசாமி , சலமன் பாப்பையா, வைரமுத்து, மீரா, மேத்தாதாஸன், ' 'இளம்பிறை'ரஹ்மான், கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் தா. பாண்டியன், மகேந்திரன், நல்லகண்ணு, மாணிக்கம் , அருணாசலம் உட்பட பலருடன் நட்பையும் பேணியவர்.

மல்லிகை, இலங்கை மற்றும் புகலிட

தமிழக எழுத்தாளர்கள் பலரது உருவப்படங்களையும் அட்டையில் பதிவுசெய்து அவர்களைப்பற்றிய ஆக்கங்களையும் பிரசுரித்துவந்தது.

இதுவும் பெறுமதிமிக்க இலக்கியப்பணிதான்.

தமிழக படைப்பாளிகள் ஜெயகாந்தன், சிதம்பர ரகுநாதன், தி.க.சிவசங்கரன், வல்லிக்கண்ணன், நீலபத்மநாபன், நா.வானமாமலை, பா.செயப்பிரகாசம், கவிஞர் அறிவுமதி, ஓவியர் மருது, சுதந்திர போராட்ட தியாகி சிந்துபூந்துறை அண்ணாச்சி சண்முகம் பிள்ளை, ஏ.ஏ. ஹெச். கே.கோரி மற்றும் வெளிநாடுகளில் வாழும் அ.முத்துலிங்கம் கவிஞர் அம்பி , வவுனியூர் இரா. உதயணன்,பத்மநாப ஐயர் , கவிஞர் சேரன் , நிலக்கிளி பாலமனோகரன் , க.பாலேந்திரா , எஸ்.பொ., வ.ஐ.ச.ஜெயபாலன் , சுதாராஜ் , இளைய அப்துல்லாஹ் , முருகபூபதி ஆகியோரின் உருவப்படங்களையும் அவர்களைப்பற்றி ஏனைய எழுத்தாளர்கள் எழுதிய ஆக்கங்களையும் மல்லிகை கடந்த காலங்களில் பிரசுரித்து அவர்களின் கலை, இலக்கிய, சமூகப்பணிகளை கௌரவித்திருக்கிறது.

குறிப்பிட்ட அட்டைப்படக்கட்டுரைகளும் தனித்தனி தொகுப்புகளாக, மல்லிகைப்பந்தலில் நூலுருப்பெற்றன. அவை:-

அட்டைப்பட ஓவியங்கள் (1986)
மல்லிகை முகங்கள் (1996)
அட்டைப்படங்கள் (2002)
முன்முகங்கள் (2007)

காலம்காலமாக மல்லிகையுடனும் ஜீவாவுடனும் முரண்பட்டவர்கள் கூட மல்லிகையின் அட்டைப் படங்களிலும் உள்ளடக்கத்திலும் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப்பண்பு இலங்கை இலக்கிய உலகத்திற்கு மட்டுமல்ல தமிழக இலக்கியவாதிகளுக்கும் முன்னுதாரணமாகும். தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இலக்கியவாதிகள் இயங்கவேண்டும் என்பதற்கும் மல்லிகை ஜீவா முன்னுதாரணமாகியிருந்தார்.

இலங்கை அரசின் அதியுயர் இலக்கியவிருதான சாகித்திய ரத்னா, மற்றும் தேசத்தின் கண் விருதும், கனடா

இலக்கியத்தோட்டத்தின் இயல்விருதும் பெற்றவர்.

ஜீவாவின் சிறுகதைகள்,
ஆங்கில, சிங்கள மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. அவரது பல கதைகளின் சிங்களமொழிபெயர்ப்பு **பத்ரே பிரசூத்திய.** (மொழிபெயர்த்தவர் இப்னு அஸூமத்)

ஜீவாவின் வாழ்க்கை வரலாற்று நூல்
எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம். இதனை **Undrawn Portrait for Unwritten Poetry** என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் நல்லைக்குமரன் க. குமாரசாமி.

சோவியத்நாட்டுக்கும் பிரான்ஸ், ஜெர்மனி, லண்டனுக்கும் சென்று அங்கிருக்கும் கலை, இலக்கியவாதிகளால் பாராட்டி கௌரவிக்கப்பட்டவர்.

அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகவீனத்தையடுத்து 2012 இற்குப்பின்னர் மல்லிகையின் வரவு தடைப்பட்டது.

மல்லிகை ஜீவா எழுத்தாளர், இதழாசிரியர், சமூகப்போராளி, முதலான அடையாளங்களுடன் மறையவில்லை. வரலாறாகவே வாழ்ந்துகொண்டிருப்பார் !

அவரது மறைவையடுத்து இலங்கையிலும் தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் தொடர்ச்சியாக இணையவழி காணொளி நினைவேந்தல்களும் இடம்பெற்றுவருகின்றன.

இலங்கை அரசு அவருக்கு நினைவு முத்திரை வெளியிடவேண்டும் எனவும், அவர் பிறந்த யாழ்ப்பாணம் மண்ணில் அவருக்கு நினைவு மண்டபம் அமைக்கவேண்டும் எனவும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இத்தனை பெருமைக்கும் சொந்தக்காரரான மல்லிகை ஜீவா அவர்களினால், 1972 ஆம் ஆண்டு ஈழத்து இலக்கிய உலகிற்கு நான் அறிமுகப்படுத்தப்பட்டேன்.

அவரது மல்லிகையில் 1972 ஆம் ஆண்டு ஜூலை மாத இதழில் எனது முதலாவது சிறுகதை **கனவுகள் ஆயிரம்** வெளியானது.

அதனையடுத்து எனது பல சிறுகதைகளும், கட்டுரைகளும் மல்லிகையில் தொடர்ந்து வெளிவந்தன.

எனது பாட்டி சொன்ன கதைகள், ( சிறுவர் இலக்கியம் ) கங்கை மகள் ( சிறுகதைகள் ) ஆகியன மல்லிகைப்பந்தல் வெளியீடுகளாக வந்தன.

மல்லிகை ஜீவா நினைவுகள் என்ற நூலையும் 2001 ஆம் ஆண்டு வெளியிட்டேன்.

இலங்கையில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டை நடத்தவேண்டும் என்ற அவரது நீண்டநாள் கனவையும் பலரதும் ஆதரவுடன் 2011 ஆம் ஆண்டு கொழும்பில் நான்கு நாட்கள் நடத்தி நனவாக்கியிருக்கின்றேன்.

ஈழத்தின் தர்மாவேசக்குரல் மல்லிகை ஜீவா, தனது குரலை 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி நிரந்தரமாக நிறுத்திக்கொண்டாலும், அதற்கு முன்னர் சில வருடங்களாகவே இலங்கை தலைப்பட்டினத்திற்கு அப்பால் புறநகரமான மட்டக்குளியவில் அமைந்த காக்கைதீவு என்ற இடத்தில் ஏகபுதல்வன் திலீபனின் இல்லத்திலிருந்தவாறு மௌனத் தவமியற்றிக்கொண்டிருந்தார்.

மல்லிகை ஜீவாவுடன் எனக்கிருந்த உறவு ஐந்து தசாப்தங்களுக்கும் மேற்பட்டது. 1971 முதல் 1987 தொடக்கம் வரையில் ஒவ்வொரு மாதமும் அவருடன் பல மணிநேரங்களை செலவிட்டிருக்கின்றேன்.

அவருடன் இலங்கையில் பல பிரதேசங்களுக்கும் இலக்கியப்பயணம் மேற்கொண்டேன். தலைநகரில் அவருடன் வீதிவீதியாக சுற்றியலைந்தேன். அவருக்குப்பிடித்தமான உணவகங்களில் பசியையும் போக்கினோம். அவருடனான பயணம் தமிழகம் வரையும் வியாபித்திருந்தது.

அவரது 93 வயது முதுமையில் அவரது உடல் நிலையை கருதி, மறைவுச்செய்தி எந்தநிமிடத்திலும் வரலாம் என எதிர்பார்க்கப்பட்டதாயிருந்தாலும், அச்செய்தி உறுதியானபோது உள்ளம் சமநிலையின்றி தவித்துப்போனது.

மின்னஞ்சல் ஊடாகவும் காணொளிகள் வாயிலாகவும் வந்துகொண்டிருந்த பதிவுகளை கண்ணுற்றபோது, மனம் பேதலித்து தொண்டை அடைத்தது. விம்மலை அடக்க பிரயத்தனப்படவேண்டியிருந்தது.

உடன் பிறப்பினை இழந்துவிட்ட சோகம்தான் இற்றைவரையில் மனதை அலைக்கழிக்கிறது.

அதிலிருந்து விடுபடுவதற்கு மல்லிகை ஜீவாவின் வாழ்வில் நிகழ்ந்த சுவாரசியமான சம்பவங்களையும் மறக்கமுடியாத நிகழ்வுகளையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளத் தொடங்கினேன்.

அவரது மறைவையடுத்து, அவர் குறித்து நான் எழுதிய சில ஆக்கங்களின் தொகுப்பே இந்நூல்.

இந்த ஆக்கங்களில் அவரது இலக்கிய ஆளுமைக்கு அப்பாலிருந்த பல பக்கங்களையும் வாசகர்கள் தரிசிக்கமுடியும்.

இதனை அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியாகும் அக்கினிக்குஞ்சு, தமிழ் முரசு இணைய இதழ்களில் தொடர்ந்து எழுதினேன். இவ்விதழின் ஆசிரியர்கள் யாழ். பாஸ்கர், கவிஞர் செ. பாஸ்கரன் ஆகியோருக்கும் தமிழ்முரசு ஆசிரிய பீடத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

மல்லிகை ஜீவா மறைந்தபின்னர் இலங்கையிலும் உலகெங்கும் மெய்நிகர் ஊடாக பல நினைவேந்தல் நிகழ்வுகள் நடந்தன. சிலவற்றில் நானும் கலந்துகொண்டு உரையாற்றினேன்.

மல்லிகை ஜீவா நினைவு முத்திரை இலங்கையில் வெளியிடப்படவேண்டும். அவர் பிறந்த யாழ். மண்ணில் அவர் நினைவாக ஒரு மண்டபம் அமையவேண்டும். அங்கு அவரை நினைவுபடுத்தும் ஆவணங்கள் இடம்பெறல் வேண்டும் என்றும் பலரிடத்திலும் வேண்டுகோள்களை விடுத்தேன்.

கொரோனோ பெருந்தொற்றினால், இந்த வேண்டுகோள்கள் இன்னமும் கனவாகவே மௌனத்தவமியற்றுகின்றன. எனினும் எதிர்காலத்தில் இக்கனவுகள் நனவாகவேண்டும். அதற்காகவும் நாம் உழைக்கவேண்டும்.

கடந்த ஆண்டு ( 2021 ) எனக்கு 70 வயது பிறந்தது. 1972 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதியன்றுதான், எனது பிறந்த தினத்தின்போது எனது முதல் சிறுகதை **( கனவுகள் ஆயிரம் )** மல்லிகையில் வெளியாகி, குறிப்பிட்ட இதழை ஜீவா யாழ்ப்பாணத்திலிருந்து தபாலில் அனுப்பி பெற்றுக்கொண்டேன். இது தற்செயல் நிகழ்வு.

கடந்த 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி, எனது 70 வயது பிறந்த தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட மூன்று நூல்களின் ( கதைத் தொகுப்பின் கதை, நடந்தாய் வாழி

களனி கங்கை, பாட்டி சொன்ன கதைகள் ) வெளியீட்டை மல்லிகை ஜீவா நினைவரங்கிலேயே நடத்தினேன்.

இதுவே பெருந்தொற்று காலத்தில் வெளியரங்கில் நடந்த முதலாவது ஜீவா நினைவேந்தல் நிகழ்ச்சியாகும். இவ்வரங்கில் ஜீவாவின் உருவப்படத்திற்கு விளக்கேற்றி மலர் அஞ்சலி செலுத்தினோம்.

இலக்கிய நண்பர் நடேசன், ஜீவா பற்றிய நினைவுரையை நிகழ்த்தினார். மல்லிகை ஜீவா நினைவு விருதை அவுஸ்திரேலியாவில் நீண்டகாலம் **அக்கினிக்குஞ்சு** இணைய இதழை நடத்திவரும் நண்பர் யாழ். பாஸ்கர் அவர்களுக்கு வழங்கி கௌரவித்தோம். இந்நிகழ்வு சம்பந்தமான படங்களும் இந்நூலில் பதிவேற்றப்பட்டுள்ளன.

இந்நூலுக்கான முகப்போவியம் வரைந்துள்ள எமது இனிய நண்பர் ஓவியக் கலைஞர் திரு. கிறிஸ்டி நல்லரெத்தினம் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

அன்புடன்

letchumananm@gmail.com முருகபூபதி

## ஜீவாவும் சைக்கிளும்

டொமினிக் ஜீவா அவர்களை 1963 ஆம் ஆண்டு முதல் முதலில் சைக்கிளுடன்தான் யாழ்ப்பாணத்தில் பார்த்தேன். அந்தசைக்கிள்தான் அவரிடமிருந்த முக்கியமான உடைமை. அதில் அவர் யாழ். குடாநாடெங்கும் சுற்றியலைந்தார்.

அதனை எண்பது ரூபாவுக்கு வாங்கியிருந்தார். பின்னாளில் **என்னிடமும் ஒரு சைக்கிள் இருந்தது** என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை மல்லிகையிலும் எழுதியிருக்கிறார். யாழ். கஸ்தூரியார் வீதியில் அவருடைய தந்தையின் ஜோசப் சலூனின் பின்புறத்து அறையில் மல்லிகையின் பக்கங்களை வெள்ளீய அச்சுக்களில் கோர்த்த பின்னர் அவற்றை பக்குவமாக ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி காங்கேசன்துறை வீதியில் அமைந்த ஸ்ரீலங்கா அச்சகத்திற்கு எடுத்துவந்து அச்சிடக்கொடுப்பார்.

ஒருநாள், யாரோ ஒரு பாதசாரி குறுக்கே வந்து அவரது சைக்கிளை மோதியதனால், அச்சுக்கோர்க்கப்பட்ட அந்தப்பக்கங்கள் அனைத்தும் சீர்குலைந்து நடுவீதியில் சிந்திவிட்டன.

சைக்கிளை ஒரு பறம் சாத்திவிட்டு, சிதறிக்கிடந்த எழுத்துக்களை கூட்டி அள்ளி எடுத்துச்சென்றார்.

பின்னர் சில வருடங்கள் கழித்துத்தான் அவர் யாழ். ராஜா தியேட்டருக்கு பின்புறம், கஸ்தூரியார் வீதிக்கும் கே.கே. எஸ். வீதிக்கும் இடையில் ஊடறுத்துச்செல்லும் குச்சொழுங்கையில் ஒரு சிறிய கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து மல்லிகை காரியாலயத்தை தொடக்கினார்.

அவரிடம் நீண்டகாலம் அச்சுக்கோப்பாளராகவிருந்த சந்திரசேகரம் அண்ணர் தினமும் தமது ஊர் நீர்வேலி மதுவனிலிருந்து தனது சைக்கிளில் வந்து பணியாற்றுவார். அவருக்கு தினக்கூலி கொடுக்கவேண்டும்.

அதற்கும் சிலசமயங்களில் ஜீவா சிரமப்படுவார்.

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வரவேண்டும் என்று விரும்பியவர்களில் ஜீவாவும் ஒருவர். அது சம்பந்தமாக

மல்லிகையில் ஆசிரிய தலையங்கங்களும் எழுதினார். 1974 இல் யாழ். பல்கலைக்கழக வளாகம் அமைந்ததும், அதனை வரவேற்றும் ஆசிரியத் தலையங்கம் எழுதியதுடன், அதன் முதல் தலைவராக பணியேற்ற பேராசிரியர் கைலாசபதி மற்றும் அங்கு விரிவுரையாற்ற வந்த இதர பேராசிரியர்கள் சிவத்தம்பி, வித்தியானந்தன், கலாநிதிகள் நுஃமான், சுப்பிரமணிய அய்யர், மௌனகுரு , சித்ரலேகா, நித்தியானந்தன், சண்முகதாஸ், நிர்மலா, மற்றும் ஏ.ஜே. கனகரத்னா, ஆ. சிவநேசச்செல்வன், சோ. கிருஷ்ணராஜா உட்பட சில கலை, இலக்கியவாதிகளை ஜீவா ஆழமாக நேசித்தார்.

அவர்களுக்கு மாதாந்தம் மல்லிகை பிரதிகளை எடுத்துச்சென்று வழங்கினார்.

பல்கலைக்கழக மாணவர்களும் மல்லிகை காரியாலயம் வந்து உசாத்துணைக்குத் தேவையான குறிப்புகளை எழுதிச்செல்வர்.

ஒரு நாள் ஜீவா யாழ். பல்கலைக்கழக வளவில் விட்டுச்சென்ற அவர் நேசித்த அவரது சைக்கிள் காணாமல்போனது. திருட்டுப்போன அவரது சைக்கிள் இறுதிவரையில் கிடைக்கவேயில்லை.

---0---

## மதத்தை நம்பாமல் மருத்துவரை நம்பியவர்

ஜீவாவின் ஏக புதல்வன் திலீபன் குழந்தையாகவிருந்த காலப்பகுதியில் காலை உணவுக்கு அவன் ஆசைப்படும் அப்பம் வாங்கிக்கொடுக்கவும் வழியின்றி, அவன் துயில் எழுவதற்கு முன்பே வீட்டை விட்டு புறப்பட்டுவிடுவார்.

ஜீவாவின் வீடு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு முன்பாக ஒரு சிறிய ஒழுங்கையில் அமைந்திருக்கிறது. அவரது மனைவியின் பெயர் புஷ்பராணி, மூத்த மகள் சுவர்ணலதா, இளைய மகள் பிரேமலதா, திலீபன்தான் வயதில் குறைந்த ஒரே மகன். அவன் அப்பாவின் செல்லம். கூட்டங்களுக்கும் அப்பாவுடன் தொற்றிக்கொண்டு வந்துவிடுவான்.

சுவர்ணலதாவுக்கு இதயத்தில் துவாரம் தோன்றியதால் உடல் உபாதை இருந்தது. யாழ். போதனா மருத்துவமனையில் கடமையாற்றிய இருதய சிகிச்சை நிபுணர் மருத்துவர் நற்குணம்தான் ஜீவாவின் மகளுக்கு சிகிச்சையளித்தார்.

கொழும்புக்கும் அழைத்து சிகிச்சை செய்வித்தார். அந்தப்பிள்ளையின் சித்தியும் ஜீவாவுடன் வந்திருந்தார். மருதானையில் ஒரு கத்தோலிக்க தேவாலயத்தில் அந்த சித்தி பிரார்த்தனைக்கு மகளையும் ஜீவாவையும் அழைத்துச்சென்றார்.

ஆனால், ஜீவா வெளியே நின்றார். அவருக்கு மருத்துவரில் மாத்திரமே நம்பிக்கை இருந்தது ! மருத்துவர் நற்குணத்தின் மகத்தான சேவைபற்றியும் மல்லிகையில் ஜீவா எழுதினார்.

## ஜீவாவின் தாயாரின் மரணம்

யாழ்ப்பாணத்தில் ஜீவாவின் தாயார் மரணமடைந்தபோது, அவரது இறுதிச்சடங்கின் பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக மயானம் சென்றது.

அந்த நிகழ்வு முடிந்ததும், ஜீவா நேரே றீகல் தியேட்டரில் ஆங்கில திரைப்படம் பார்க்கச்சென்றார். அவர் ஆங்கில

திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வம் மிக்கவர். அவருக்கு மிகவும் பிடித்த நடிகர் **சார்லி சப்ளின்.**

ஜீவாவுக்கும் இளமையில் காதல் வந்தது. அவரது முதல் காதல் நிறைவேறாமல் தோல்வியில் முடிந்தது. அந்த யுவதி ஜீவாவின் வீட்டுக்கு அருகில் வசித்த உயர்சாதியைச்சேர்ந்தவர். இருவரும் உளமாற நேசித்தனர்.

ஒருநாள் இரவு, வேலிமறைப்பிலிருந்து இவர்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்ததைப்பார்த்துவிட்ட அந்த யுவதியின் தாயார் ஜீவாவை கையெடுத்துக்கும்பிட்டு மன்றாடிக்கேட்டு, தனது மகளை விட்டுவிடுமாறு கெஞ்சியிருக்கிறார்.

" தங்கள் சாதிசனம் மகளுக்கு ஏதும் செய்துவிடும் தம்பி. தயவுசெய்து விட்டுவிடு. உன் காலில் விழுந்தாவது கேட்கிறேன் " என்றதும், ஜீவா அந்தக்காதலைத்துறந்தார்.

பின்னர் தமது உறவினரின் மகளை திருமணம்செய்து மூன்று பிள்ளைகளின் தந்தையானார். தமது 75 வயதுக்குப்பின்னரும் தன்னை யாரும் காதலிக்கமாட்டார்களா..? அவ்வாறு காதலிப்பவருக்கு இலக்கிய உணர்வு இருக்கவேண்டும் " என்று லண்டன் தீபம் தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் சிரித்துக்கொண்டே சொன்னார்.

## பிச்சை எடுக்க விரும்பினார்

ஜீவாவுக்கு பல விநோதமான விருப்பங்கள் இருந்தன. அவர் யாழ்ப்பாணத்திலும் பின்னர் கொழும்பிலும் அன்றாடம் காணும் பிச்சைக்காரர்கள் குறித்தும் அவதானம் இருந்தது.

பிச்சைக்காரர்கள் வீடுவாசல் இன்றி, தெருவோரங்களிலும் மரநிழலிலும் படுத்துறங்கும் காட்சிகளை பார்த்துவந்த ஜீவா, அந்த வாழ்க்கை எப்படி இருக்கும்..? அந்த அனுபவத்தையும் வாழ்ந்து பார்க்கவேண்டும் என்று விரும்பியிருந்தார்.

தான் யார் என்பதை அடையாளம் காண்பிக்காமல், இலங்கையில் தான் என்றைக்குமே நடமாடாத பிரதேசத்தில் பிச்சைக்காரனாக வேடமிட்டு, மக்களிடம் தானம் வாங்கிச்சாப்பிடவேண்டும் என்ற எண்ணமும் அவரது மனதில் துளிர்த்தது.

ஆனால், அந்த அவரது விநோத ஆசை என்றைக்கும் நிறைவேறவில்லை.

கொழும்பில் புறக்கோட்டை ஸ்ரீகதிரேசன் வீதியில் ஒருநாள் அவர் நடந்து சென்றபோது ஒரு தீப்பெட்டி தெருவோரத்தில் கிடந்ததை கண்ணுற்று, அதனை எடுத்துப்பார்க்கிறார்.

அதனுள்ளே ஐநூறு ரூபா மடித்துவைக்கப்பட்டிருந்தது. அது யாருடையதோ பணம். அதனை தான் சொந்தம் கொண்டாடக்கூடாது என்ற எண்ணத்தில் அதனை ஐந்து ரூபா நாணயக்குற்றிகளாக மாற்றியிருக்கிறார்.

அந்த குற்றிகளை தனது நேஷனல் பொக்கட்டுக்குள் போட்டுக்கொண்டு, அந்த வீதியில் நடந்து திரிந்து ஒவ்வொரு நாணயக்குற்றிகளையும் மெதுவாக போட்டுக்கொண்டு சென்றிருக்கிறார்.

அவ்வாறு நூறு ஐந்து ரூபா நாணயக்குற்றிகளையும் வீதியின் இருமருங்கும் போட்டுவிட்டு, தனது மல்லிகை காரியாலத்திற்கு திரும்பினார்.

**---0---**

## மல்லிகை ஜீவாவும் புறாக்களும்

இலக்கியத்திற்கு அப்பால் மல்லிகை ஜீவா  ஆழ்ந்து நேசித்த பறவை இனம் புறா.

நூற்றுக்கணக்கான வகைகளைக்கொண்ட பறவை இனம் புறா மீது அவருக்கு அளவுகடந்த பிரியம். உலகில் சமாதானத்தின் சின்னமாக கருதப்படும் புறா, முற்காலத்தில் நாட்டுக்கு நாடு தகவல் பரிமாற்றத்திற்கும் உதவியிருக்கிறது. நாமறிந்த புறா இனங்கள்: மணிப்புறா, மாடப்புறா, விசிறிப்புறா, ஆடம்பரப் புறா. ஆனால், இதற்கு மேலும் பல புறா இனங்கள் உலகெங்கும் வாழ்கின்றன. அவற்றில் சில படிப்படியாக மறைந்து வருகின்றன.

மல்லிகை ஜீவா யாழ்ப்பாணம் ரயில் நிலையத்திற்கு அருகில் வசித்தார். இன்றும் அவரது யாழ்ப்பாணம் இல்லம் தினமும் ரயிலின் ஓசையை கேட்டவண்ணமே அந்த வீட்டின் தலைவன் இல்லாமல் மௌனத்தவமியற்றுகிறது ! அந்த இல்லத்தின் பின்புறத்தில் ஒரு கூடு அமைத்து பல புறாக்களை வளர்த்தவர் ஜீவா.

அன்றாடம் வீட்டில் சமையலுக்கு உணவுப்பொருட்கள் இல்லாத நெருக்கடியான நிலை வந்துற்றபோதிலும் தாம் வளர்த்த புறாக்களுக்கு உணவளிப்பதை தவிர்க்காமல் அவற்றை நேசமுடன் பராமரித்து வளர்த்தவர் ஜீவா என்பது வெளியுலகில் பலருக்கும் தெரிய நியாயம் இல்லை.
புறா இனத்தின் வகைகள், அவற்றின் உயிர்வாழும் காலம், அவை விரும்பி உண்ணும் தானியங்கள், நினைவு தப்பாமல் பறந்து சென்று மீண்டு வரும் அதன் இயல்பான ஆற்றல் பற்றியெல்லாம் துல்லியமான அறிவுகொண்டிருந்தவர் ஜீவா என்றால் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால், அதுதான் உண்மை.

ஒரு சமயம் வழக்கப்போல் ஜீவா புறாக்கூட்டுக்குள் தானியம் வைக்கும்பொழுது அதன் உள்ளேயிருந்து  ஒரு புடையன் பாம்பு சீறியிருக்கிறது. நல்லவேளை ஜீவா கையை எடுத்துவிட்டார். அப்பொழுது புறாக்களும் அக்கூட்டில் இருக்கவில்லை என்பது அவருக்கு கிடைத்த பெரிய நிம்மதி. ஜீவா தனக்கும் தான் வளர்த்த புறாக்களுக்கும்  இடையே நீடித்த சாசுவதமான உறவைப்பற்றி எங்காவது எழுதியிருக்கிறாரா...? என்பதும் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் மல்லிகை முதலாவது இதழ் 1966 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வெளியானபோது அதன் விலை 30 சதம்தான் !

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஒரு காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த மல்லிகையும் எமது மக்களைப்போன்று வடக்கில் உருவான அசாதாரண சூழ்நிலைகளையடுத்து கொழும்பில் ஸ்ரீ கதிரேசன் வீதிக்கு இடம்பெயர்ந்து, இறுதியில் அங்கிருந்தே சில வருடங்களுக்கு முன்னர் தனது ஆயுளையும் நிறைவுசெய்துகொண்டது.

ஒரு சிகையலங்காரத்தொழிலாளியாக வாழ்ந்து, பொதுவுடைமைக் கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு, அரசியல்வாதியாகிவிடாமல், இலக்கியவாதியாக தன்னை வளர்த்துக்கொண்டவர் ஜீவா.

சிறுகதை எழுதிக்கொண்டிருந்தவர் எவ்வாறு ஒரு இலக்கிய இதழை துணிந்து நடத்த முன்வந்தார் என்ற கதையை தனது சுயசரிதையிலும் விபரித்திருக்கிறார். இந்தச்சரிதை ஆங்கிலத்திலும் வெளியாகியிருக்கிறது.

முழுநேர எழுத்தாளராக ஈழத்து இலக்கிய உலகில் அறிமுகமான ஜீவா, இதழாசிரியராகவே தனது வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டவர். போர் நெருக்கடி மிக்க, மின்சாரம் தடைப்பட்டிருந்த காலப்பகுதியிலும் அச்சுத்தாளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிய சூழலிலும் யாழ்ப்பாணத்திலிருந்து மல்லிகை வெளியானது. அப்பியாசக்கொப்பித்தாளிலும் மல்லிகை அச்சாகியதை மறந்துவிடமுடியாது.

ஆயினும் அன்றைய அசாதாரண சூழ்நிலைகளோ- காகிதத்தட்டுப்பாடோ - வாழ்வாதார நெருக்கடியோ இல்லாத இந்த கணினி யுகத்திலும் கொழும்பிலிருந்து வெளியான மல்லிகை, அதன் ஆசிரியராலேயே நிறுத்தப்பட்டதும் ஈழத்து இலக்கிய உலகில் மறக்கமுடியாத செய்தியாகும்.

மல்லிகை ஜீவா அவர்களை பாரதியின் புதிய ஆத்திசூடியின் வெளிச்சத்திலும் அடையாளம் கண்டோம்.

ஏறு போல் நட - ஒய்தலொழி - குன்றென நிமிர்ந்து நில் - சிதையா நெஞ்சுகொள் - சுமையினுக்கு இளைத்திடேல் - தூற்றுதல் ஒழி - தோல்வியிற் கலங்கேல் - ரௌத்திரம் பழகு - வெடிப்புறப்பேசு - முதலான குணாதிசயங்கள் இருந்தன. இந்த அருங்குணங்கள் மல்லிகைஜீவாவிடமும் நீடித்திருந்தது என்பது பரகசியம்.

இலக்கிய இதழை யாழ். மண்ணில் மலரவைக்கவேண்டும் என்ற எண்ணக்கரு அவரது மனதில் விதைக்கப்பட்டவேளையில் என்ன பெயர் சூட்டலாம்...? என்று தனது இலக்கிய நண்பர்களுடன் கலந்துரையாடியிருக்கிறார்.

இதயம் - கமலம் - மலர் - செந்தாரகை - கலைஞன் முதலான பெயர்கள் ஆலோசிக்கப்பட்டு,  இறுதியில் ஜீவாவே மல்லிகை என்ற பெயரை தேர்வுசெய்துள்ளார். மல்லிகை வெண்மையானது. வாசம் நிரம்பியது. ஏழை முதல் செல்வந்தன் வரையில் நல்ல நிகழ்வுகளுக்கும் துயர நிகழ்வுகளுக்கும் பயன்படுத்தப்படுவது, அதனால் எளிமையானது முதலான அபிப்பிராயங்களே அவர் மனதில் எழுந்திருக்கின்றன.

மல்லிகையின் முதலாவது ஆசிரியத்தலையங்கத்தினை ஜீவாவின் கையெழுத்தில் இங்கே பார்க்கலாம்.

மெல்லிசையின் ஒரு திருப்புமுனை

வணக்கம்!


மெல்லிசையின் ஒரு திருப்பம் இது.
திரைப் பாடல்களுக்கு 'மெல்லிசை' என்ற பெயர் சூட்டப்பட்டது. இருந்தும் கூட; [illegible] வரலாறு.

ஒரு காலத்தில் 'இசை' எனப் பெயர் வைக்கலாம் என்றோம். இன்னொருவர் 'கானம்' எனப் பெயர் சூட்டினார். வேறொருவர் 'மெல்' என்று வைக்கலாமென்ற யோசனையைச் சொன்னார்.

அந்த [illegible] பின்தொடர்ந்த அவர் 'மெல்லிசை' என அழைக்கலாமே என அபிப்பிராயப் பட்டார். மெல்லிய 'சங்கீதம்' என்று பெயர் சூட்டப்பட்டு அதற்கான [illegible] செய்யப்பட்டு வந்தது.

[illegible] இப் பெயர் காரணம் இல்லை. இது அப்படி அவ்வாறு [illegible] கோலோச்சுவதும்... நல்ல [illegible]

[illegible]
'மெல்லிசை'
[illegible]



இதனை பொக்கிஷமாக பாதுகாத்து தந்தவர் மூத்த பத்திரிகையாளரும் ஜீவாவின் நண்பருமான – தற்போது கனடாவிலிருந்து – தமிழர் தகவலை வெளியிடும் எஸ். திருச்செல்வம்.

ஜீவாவுக்கு **60** வயது பிறந்து மணிவிழாக்காலம் தொடங்கியபோது, திருச்செல்வம் அவருக்கு மலர்மாலை எடுத்துச்சென்று வாழ்த்தினார்.



செல்வதற்கு முன்னர், யாழ்ப்பாணத்தில் ஸ்ரான்லி வீதியில் ஸ்டார் கராஜ் என்ற தொழிலகத்தை நடத்திக்கொண்டிருந்த ஈழத்து மூத்த முற்போக்கு எழுத்தாளரும் அரசியல்கருத்தியலில் ஜீவாவுடன் முரண்பட்டிருந்தவருமான கே. டானியலையும் திருச்செல்வம் அழைத்துச்சென்றார்.

டானியலும் உடன் சென்று ஜீவாவை வாழ்த்தினார். அந்நாட்களில் எமது இலக்கிய உலகம் இவ்வாறுதான் இருந்தது.

இன்று..?! முகநூல் எழுத்தாளர்களின் அக்கப்போர்தான் கூடியிருக்கிறது !

மல்லிகை வெளிவரத்தொடங்குவதற்கு முன்பே ஜீவாவும் வெண்ணிற ஆடைகளையே அணியத்தொடங்கிவிட்டார். அவரை வெள்ளை நேஷனல் வெள்ளை வேட்டியுடன்தான் எங்கும் காணலாம். அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடுகள், கூட்டங்களில் மாத்திரம் தோளிலே சிறிய சிவப்பு துண்டை அணிந்திருப்பார்.

இலங்கையிலும் தமிழகத்திலும் பல சிற்றிதழ்கள் சிலரது ஆர்வத்தின் நிமித்தம் கூட்டு முயற்சியாகத்தான் வெளிவந்துள்ளன. இடையில் அவை குழுமோதல்களினால் அற்பாயுளிலும் மறைந்தன. அத்தகைய இதழ்களுக்கென நீண்ட பெயர்ப்பட்டியல் உண்டு.

பொதுவுடைமையில் நம்பிக்கை வைத்திருந்த மல்லிகை ஜீவா, தமது மல்லிகை விடயத்தில், கூட்டுச்சேர்தல் - கூட்டுறவு அடிப்படையில் குழுவாக செயற்படல் முதலான வழிமுறைகளை பின்பற்றவில்லை.

சுமார் 47 வருடகாலமாக வெளிவந்த மல்லிகையின் சாதனை இதுதான் !

சாதாரண குடும்பத்தில் பிறந்து தனக்குத்தெரிந்த தொழிலையே செய்து வாழ்ந்தவரை - தோழர் கார்த்திகேசன் மாஸ்டர் இடதுசாரி அரசியலுக்குள் அழைத்து வந்தார். ராஜகோபாலன் என்ற இலக்கிய ஆர்வலர் இலக்கியத்தின்பால் திருப்பினார். தோழர் புத்தகக்கடை பூபாலசிங்கம், ஜீவாவுக்கு புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தை வளர்த்தார். கார்த்திகேசன் மாஸ்டரும் புத்தகக்கடை பூபாலசிங்கமும் ஜீவா சென்றிருக்கும் இடத்துக்கு முன்பே சென்றுவிட்டார்கள்.

இராஜகோபாலுக்கும் தற்போது 95 வயது கடந்துவிட்டது. கனடாவில் வசிக்கிறார். இவரது உறவினர்தான் இலங்கையிலிருக்கும் எழுத்தாளர் வதிரி சி. ரவீந்திரன்.

ஜீவா மறைந்த பின்னர் நடந்த மெய்நிகர் நினைவேந்தலில் ராஜகோபாலின் புதல்வன் ரொஜர்ஸ் கனடாவிலிருந்து கலந்துகொண்டு உரையாற்றினார்.

## மல்லிகை ஜீவாவின் தர்மாவேசம்

மல்லிகை நடத்தியபொழுது இடதுசாரிச் சிந்தனையாளர்களினதும் முற்போக்கு இலக்கியவாதிகளினதும் சகவாசத்தினால் தன்னையும் சர்வதேசியவாதியாக்கிக்கொள்ள முயன்று பிற மொழி இலக்கியங்களுக்கும் மல்லிகையில் களம் வழங்கினார்.

சகோதர சிங்கள இலக்கியவாதிகளின் மீது நேசமுற்று பிரபல மூத்த சிங்கள இலக்கிய மேதை மார்ட்டின் விக்கிரம சிங்காவை கௌரவித்து மல்லிகை முகப்பில் அவரது படத்தை வெளியிட்டு சிறப்பிதழ் வெளியிட்டார்.

அதனைக்கண்டு பொறுக்கமுடியாத ஒரு அதிதீவிர தமிழ்க்கொழுந்து, யாழ். மத்திய கல்லூரிக்கு முன்னால் தமது பிரியத்துக்குரிய சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஜீவாவை வழிமறித்து - மார்ட்டின் விக்கிரமசிங்காவின் படத்துடன் வெளியான மல்லிகை இதழை வாங்கி, அவர் முன்னாலேயே கிழித்து முகத்தில் எறிந்துவிட்டுச்சென்றது.

அதன் பின்னும் பல வருடங்கள் மல்லிகை வெளியானது. ஜீவா தொடர்ந்தும் இலங்கையெங்கும் அலைந்து திரிந்து மல்லிகை விநியோகித்து ஈழத்து தமிழ் இலக்கியத்தை வளர்த்தார். வளம்படுத்தினார்.

ஆனால் - அந்த அதி தீவிர தமிழ்க்கொழுந்து அகதியாகச்சென்று ஐரோப்பிய நாடொன்றில் தனது வாழ்வாதாரத்திற்காக ஐரோப்பிய மொழி படித்து வாழ்கிறது.

ஜீவா ஐரோப்பாவில் நடந்த வருடாந்த இலக்கிய சந்திப்புக்கு அழைக்கப்பட்டார். அங்கு அவர் நீண்ட நேரம் எழுந்து நின்று உரையாற்றியபோது, தான் கடந்து வந்த பதையை சொன்னார்.

அவர் பேசி முடித்ததும் முழுச்சபையும் எழுந்து நின்று தொடர்ச்சியாக சில நிமிடங்கள் கரகோசம் எழுப்பியது.

அந்தக்கூட்டத்தில், பல வருடங்களுக்கு முன்னர் மல்லிகையை வாங்கி கிழித்து ஜீவாவின் முகத்தில் விட்டெறிந்த தமிழ்க்கொழுந்தும் இருந்தது.

அந்தக்கொழுந்து ஜீவாவை சந்தித்து தன்னை நினைவுபடுத்தி மன்னிப்புக்கேட்டபோது, " அய்யா, நான் ஓடிவந்துவிட்டேன். நீங்கள் இன்னமும் அங்கே தெருத்தெருவாக அலைந்து ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு தொண்டாற்றுகிறீர்கள். என்னை மன்னித்துவிடுங்கள் " எனச்சென்னதும், " சரி... எப்படி

இருக்கிறீர்..? எத்தனை குழந்தைகள், அனைவருக்கும் எனது அன்பைத் தெரிவித்துவிடும். எங்கிருந்தாலும் தாய் நாட்டை மறந்துவிடாதீர்கள் " என்றார் ஜீவா !

ஜீவா சில சமயங்களில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றும் முகத்துக்கு நேரே பேசும் இயல்புள்ளவர். யாழ்ப்பாணத்தில் பிரபலமாக இருந்த தம்பித்துரை அன் சன்ஸ் என்ற பத்திரிகை - புத்தகக்கடைக்கு மாதாந்தம் மல்லிகையில் பத்துப்பிரதிகளை வழங்குவார். அந்தக் கடை உரிமையாளர் அதனை பத்திரமாக பாதுகாத்து மேசையின் கீழே வைத்திருந்துவிட்டு, அடுத்த தடவை ஜீவா புதிய இதழின் பிரதிகளை கொடுக்கவரும்பொழுது, " எதுவும் விற்கவில்லை " - என்று மேசையின் கிழே இருந்த பத்து பிரதிகளையும் எடுத்துக்கொடுப்பார். இந்த நாடகம் பல மாதங்களாக அரங்கேறியது. வழக்கம்போல் கடையில் தொங்கும் கல்கி, குமுதம், ஆனந்தவிகடன், தினமணிக்கதிர், பொம்மை, பேசும் படம் இதழ்கள் விற்பனையாகிவிடும்.

ஒரு நாள் ஜீவாவின் தர்மாவேசம் விழித்துக்கொண்டது.

" நாளைக்கு நீர் இறந்துபோனால் உம்முடைய சாவீட்டுக்கு குமுதம், ஆனந்த விகடன், பொம்மை, பேசும் படம் ஆசிரியர்கள் வரமாட்டார்கள். யாழ்ப்பாணத்திலிருக்கும் இந்த ஜீவாதான் வருவான். " - எனச்சொன்னது ஜீவாவின் தர்மாவேசக்குரல்.

ஒரு சமயம் **The Island** பத்திரிகை வெளியிடும் நிறுவனம் வெளியிட்ட **திவயின** சிங்கள ஏடு ஜீவாவை பேட்டி கண்டு எழுத விரும்பி நாள் குறித்தது. அவருக்கு சிங்களம் தெரியாது. என்னை உடன் அழைத்துச்சென்றார். அந்த நேர்காணல் சந்திப்பை கொழும்பு கலாபவனத்தில் (**Art Gallery )** ஒழுங்கு செய்து தந்தவர் கலாசார திணைக்களத்தில் செயலாளராக பணியாற்றிய தமிழ் அபிமானி கே.ஜி.அமரதாஸ.

அவ்வேளையில் குட்டிமணி தங்கத்துரை முதலானோர் சிறையில் இருந்தனர். அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக பிரபலமாகியிருந்தார்.

சிங்கள வாசகர்களுக்கு தமிழ் இலக்கியம் போதியளவு அறிமுகம் இல்லாதிருந்த காலம். ஆனால், மார்ட்டின் விக்கிரமசிங்கா, டி.பி. இலங்கரத்னா, குணதாச அமரசேகர, கருணாசேன ஜயலத், ஜீ. பி.சேனாநாயக்கா, குணசேன

வித்தான, ஆரியரத்தின வித்தான, கே.ஜயத்திலக்க, மடவள எஸ். ரத்நாயக்கா போன்ற இலக்கியவாதிகள் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமாகியிருந்தனர்.

ஜீவா, அந்த நேர்காணலில் மேலே குறிப்பிட்ட சிங்கள எழுத்தாளர்களின் பெயர்களைச்சொல்லி, இவர்களையெல்லாம் எமது தமிழ் இலக்கிய வாசகர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் , சிங்கள வாசகர்களுக்கு தெரிந்த பெயர்கள் அமிர்தலிங்கமும் குட்டிமணியும்தான். எனச்சொன்னதும், அந்தச் சிங்கள நிருபர் திகைத்துவிட்டார். பின்னர் தன்னை சுதாரித்துக்கொண்டு, இந்தக்கருத்தையே இந்த நேர்காணலுக்கு தலைப்பாக எழுதுவேன் என்றார்.

அந்த நிருபர் சொன்னவாறே அந்தத்தலைப்பு ஜீவாவின் தர்மாவேசக்குரலாக அந்தச்சிங்கள ஏட்டில் ஒலித்தது.

தொடக்க காலத்தில் மல்லிகையின் ஆண்டு மலர்கள் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதத்தில் வெளியாகும். பிற்காலத்தில் ஜனவரி மாதத்தில் வெளியானது. மல்லிகை 46 ஆவது ஆண்டு மலரில் 2001 இல் நாடாளுமன்றத்தில் அஸ்வர் எம்.பி., மல்லிகை பற்றி உரையாற்றியபொழுது ஜீவாவையும் அவரது தேசிய உடையையும் விதந்து போற்றியது பற்றிய தகவல் பதிவாகியிருக்கிறது. நாடாளுமன்ற பதிவேட்டுத்திகதி **(Hansard - - 04-02-2001)**

**---0---**

# ஜீவாவும் மதுப்பிரியர்களும்

மல்லிகை ஜீவாவுக்கு கலை, இலக்கியம், மற்றும் பல்வேறு துறைகளையும் சார்ந்தவர்களுடன் தோழமை நீடித்திருந்தது.

சாதாரண பாமர மக்கள் முதல் படித்த வர்க்கம் வரையில் அவரது நட்பு வட்டம் பெரியது.

ஜீவா மது அருந்தமாட்டார். ஆனால், மதுப்பிரியர்களான எழுத்தாளர்களுடன் அமர்ந்து அவர்கள் மது அருந்துவதை வேடிக்கை பார்த்தவாறு பேசிக்கொண்டிருப்பார்.

யாழ்ப்பாணம் முற்றவெளிக்கு அருகாமையிலிருந்த பிரீமியர் கஃபேயில் பெரும்பாலும் மாலைவேளைகளில் அவர்கள் கூடுவது வழக்கம். உள்நாட்டு அரசியல் உலக அரசியல் இலக்கியம் சமூகம் என்ற ரீதியில் அவர்களின் கலந்துரையாடல் நீளும். எஸ். பொன்னுத்துரை, அழகு சுப்பிரமணியம், ஏ.ஜே. கனகரட்ணா ஆகியோரும் அதில் அடக்கம்.

ஜீவா தனக்கு ஏதும் குளிர்பானம் அல்லது பிளேயின் சோடா வரவழைத்து அருந்துவார். மற்றவர்கள் மதுவில் இரண்டறக் கலப்பார்கள்.

அவர்களில் ஒருவர் வேண்டுமென்றே ஜீவாவுக்கு முன்பாக ஒரு கிளாஸில் சாராயத்தை வார்த்து வைப்பார். யாராவது அந்தக்காட்சியை பார்த்துவிட்டால், ஜீவாவும் இந்தக்கூட்டத்துடன் சேர்ந்து “ தண்ணி “ அடிக்கிறார் என்று எண்ணிக்கொண்டு வெளியே போய்ச்சொல்லட்டும் என்ற உள்நோக்கம்தான் அந்த நண்பருக்கு !

( இக்காலம் என்றால் அதனை கைத்தொலைபேசியில் படம் எடுத்து முகநூலில் பதிவேற்றி, கும்மியடித்திருப்பார்கள் )

நல்லகாலம் அன்று முகநூல் இல்லை!

ஜீவாவும் சிரித்துக்கொண்டே, " செய்யிறதை செய்யுங்கோ. என்னை நீங்கள் உங்கள் வழிக்கு இழுக்கவே முடியாது " என்பார்.

ஒருதடவை அவரும் அவரது நண்பர்களும் கீரிமலைக்கு தத்தம் சைக்கிள்களில் சுற்றுலா சென்றார்கள். அவர்களில் சில எழுத்தாளர்களும் இடம்பெற்றிருந்தனர்.

கீரிமலைக்குச்சென்றபோது, அங்கும் அந்த மதுப்பிரியர்கள் தம்வசம் மதுப்புட்டிகளும் எடுத்து வருவார்கள் என்பது ஜீவாவுக்குத் தெரியாது.

மாலை முதல் இரவுவரையில் அவர்களுடன் ஜீவாவும் இருந்தார். படிப்படியாக மதுவெறி ஏறிய நண்பர்கள் படிப்படியாக தரையில் துண்டை விரித்து சுருண்டுவிட்டார்கள்.

அவர்களை அந்தக்கோலத்தில் விட்டுச்செல்லவிரும்பாத ஜீவா, தானும் ஒரு மரத்தின் கீழே துண்டைவிரித்து படுத்துவிட்டார். ஜீவா, சரிந்து படுத்தவுடன் உறங்கிவிடும் இயல்புள்ளவர்.

நடுஇரவாகிவிட்டது. ஜீவா ஆழ்ந்த உறக்கம். வெறி தெளிந்த நண்பர்கள் சிலர் எழுந்து, உறக்கத்திலிருந்த ஜீவாவை அலாக்காகத் தூக்கி வந்து கீரிமலை கேணிக்குள் வீசிவிட்டார்கள்.

ஜீவா அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு துடிதுடித்து கேணியிலிருந்து எழுந்து வந்து திட்டத் தொடங்கிவிட்டார். நண்பர்களோ சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

" இனிமேல் உங்கள் சகவாசமும் வேண்டாம். எதுவும் வேண்டாம். நான் புறப்படுகிறேன் " எனச்சொல்லியவாறு தனது சைக்கிளை ஜீவா எடுத்தார்.

அப்போதுதான் மற்றும் ஒரு நண்பர் மதுவெறியில் புலம்பிக்கொண்டு ஒரு தெரு நாயை அணைத்துப்படுத்திருக்கும் அற்புதக்காட்சியை பார்க்கிறார்.

" அந்தா பாருங்கள்... உங்கட சாராயம் என்னவெல்லாம் செய்கிறது " எனச்சொல்லிக்கொண்டு தனது ஈர உடையுடனே சைக்கிளில் ஏறி யாழ்ப்பாணம் புறப்பட்டார்.

தெருநாயை தழுவிக்கொண்டு உறங்கிய எழுத்தாளர் யார்...? என்பதை ஜீவா இறுதிவரையில் வெளியே சொல்லவில்லை. !

## பாதுகை எழுதியவர் பாதுகையும் ஏந்தினார் !!

ஜீவா 1960 களில் எழுதிய இலக்கியப்படைப்புகளில் **பாதுகை** சிறுகதை குறிப்பிடத்தகுந்தது. இச்சிறுகதை குறித்து எதிர்மறையான விமர்சனங்களும் எழுந்தன.

எனினும், இச்சிறுகதை பல தடவை மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அக்கதையின் நாயகன் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளி. கஸ்தூரியார் வீதியில்தான் அவரது தொழிலகமும் அமைந்திருந்தது. அவரது பெயர் **முத்து முகம்மது.** அத்துடன் சிறந்த இலக்கிய வாசகர். அவரே பாதுகை சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரையும் எழுதினார்.

பாதுகை கதை எழுதிய ஜீவா ஒரு சந்தர்ப்பத்தில் மற்றும் ஒருவரின் பாதுகையை ஏந்திச்சென்று, பாதுகாத்து வைத்துக்கொடுத்த செய்தி ஜீவாவின் மறைவுக்குப்பின்னர்தான் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் செங்கொடி ஏந்திய இரண்டு கட்சிகள் அக்காலத்தில் பிரபலமாக விளங்கின. இரண்டும் ஒரு காலகட்டத்தில் இணைந்திருந்தன. பின்னாளில் அந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, மாஸ்கோ அணி – பீக்கிங் அணி என்று பிளவு கண்டது.

மாஸ்கோ அணியில் தோழர்கள் அ. வயித்திலிங்கம், வி. பொன்னம்பலம், பொன். குமாரசாமி, ஸி. குமாரசாமி, ஆர். ஆர். பூபாலசிங்கம், ஐ.ஆர். அரியரத்தினம், விஜயானந்தன் , எம். சி. சுப்பிரமணியம், ஜீவா ஆகியோர் உட்பட பலர் அங்கம் வகித்தனர்.

பீக்கிங் அணியில் தோழர்கள் என். சண்முகதாசன், கே. ஏ. சுப்பிரமணியம், செந்திவேல், கந்தசாமி, கே. டானியல் உட்பட பல தோழர்கள் அங்கம் வகித்தனர்.

இரண்டு அணிகளும் கருத்துப்போராட்டம் நடத்திக்கொண்டிருந்த காலப்பகுதியில் மாஸ்கோ அணியைச்சேர்ந்தவரும் கொழும்பு மத்தியிலிருந்து நாடாளுமன்றம் தெரிவாகும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் எழுத்தாளரும் சிறந்த பேச்சாளருமான தோழர்

பீட்டர் கெனமன் ,  யாழ்ப்பாணத்திற்கு அவரது அணி சார்ந்தவர்களால்  அழைக்கப்பட்டார். அந்தக்கூட்டம் யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடக்கிறது.

அதனைக்குழப்பவேண்டும் என்ற எண்ணம் பீக்கிங் அணிக்கு தோன்றியதும்,  அதன் இளைஞர் பிரிவிலிருந்த தோழர் செந்திவேலும் மற்றும் சில இளம் தோழர்களும் அந்தக்கூட்டத்திற்குச் சென்று  சபையில் ஆங்காங்கே அமர்ந்திருந்தனர்.  பீட்டர்கெனமன் பேசிக்கொண்டிருந்தபோது இடையில் குறுக்கிட்ட  செந்திவேல்,  " நீங்கள் பேசுவது தவறு  " என்று உரத்த குரல் எடுத்துப்பேசியதும், அவரது அணியைச்சேர்ந்தவர்களும் ஆளுக்காள் எழுந்து கூக்குரலிட்டனர்.  நிலைமை மோசமடைந்து, கதிரைகளும் தூக்கப்பட்டு, அடிதடியாகிவிட்டது.

மாஸ்கோ அணியைச்சேர்ந்த ஒருவர் செந்திவேலை மடக்கிப்பிடித்து  அவரது கழுத்தை  கெட்டியாக அழுத்திக்கொண்டார். அதனை கண்ணுற்ற அதே மாஸ்கோ அணியைச்சேர்ந்த  ஜீவா ஓடிவந்து  " விடு, விடு...  அவரை விடு நாமெல்லோரும் ஒரு இரத்தம்.  எதனையும் பேசித்தீர்க்கலாம்  " எனச்சொல்லி செந்திவேலை அந்த  நபரிடமிருந்து விடுவித்துள்ளார்.

அங்கு நடந்த களேபரத்தில் செந்திவேல் தனது பாதணியையும் விட்டுவிட்டு போய்விட்டார்.  ஜீவா அதனை பத்திரமாக எடுத்துச்சென்று தனது கஸ்தூரியார் வீதி ஜோசப் சிகையலங்கார நிலையத்தில் வைத்திருந்து,  மறுநாள் அந்த வீதியில் நடந்து வந்துகொண்டிருந்த தோழர் செந்திவேலிடம் தனது கையாலேயே எடுத்துவந்து கொடுத்தாராம்.

இதுதான் ஜீவா !

இந்தத்  தகவலை  ஜீவா மறைந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் தேசிய கலை இலக்கியப்பேரவை எழுத்தாளர் ஐ. சாந்தன் தலைமையில் நடத்திய  ஜீவா  நினைவஞ்சலிக்கூட்டத்தில் பேசும்போது தோழர் செந்திவேல் குறிப்பிட்டார்.

மாற்றுக்கருத்துக்கொண்டிருந்தவர்களிடத்திலும் ஜீவா காண்பித்த மனிதாபிமானப்பண்பை அக்கூட்டத்தில்  மேலும் சிலரும் எடுத்துரைத்தனர்.

## வேட்டியை மடித்து சண்டிக்கட்டு கட்டினார் !!!

மல்லிகை ஜீவாவுக்கு அந்திம காலத்தில் நினைவாற்றல் மங்கியிருந்தாலும், அவர் தீவிரமாக இயங்கிய காலத்தில் நல்ல நினைவாற்றலுடன் வாழ்ந்தவர்.

ஒருதடவை அவருடன் கொழும்பு புறக்கோட்டையிலிருந்து இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டியில் வெள்ளவத்தைக்கு சென்றுகொண்டிருந்தேன். அக்காலப்பகுதியில் அந்த பஸ் வண்டிகளில் சாரதியின் ஆசனத்திற்கு இடப்பக்கமாக இருக்கும் வாயிலால் இறங்குவதற்குரிய அரைக்கதவு சாரதியாலேயே இயக்கப்பட்டது.

இறங்கவேண்டிய இடம் வருவதற்கு சில மணித்துளிகளுக்கு முன்னர் பயணிகள் மணியடித்ததும், சாரதி தரிப்பிடத்திற்கு அருகில் பஸ்ஸை செலுத்தி, பிரேக்போட்டு நிறுத்தியதும், அவரே தனது ஆசனத்திலிருந்தவாறு நீண்ட இணைப்பின் மூலம் அந்த அரைக்கதவை திறந்துவிடுவார்.

ஜீவா, இறங்குவதற்கு அவசரப்பட்டு, அந்த அரைக்கதவை காலால் உதைந்தார்.

அவர் அவ்வாறு செய்ததும் சாரதி கோபமுற்று, " மொனவத... பொட்டாக் இன்னவாக்கோ... " என்று சத்தமிட்டார்.

அதன் அர்த்தம், " என்னது... கொஞ்சம் பொறு " என்பதாகும்.

ஜீவாவுக்கு சிங்களம் தெரியாது, கையால் அந்த அரைக்கதவை காண்பித்தார். சாரதி மீண்டும் கோபத்தில் முதலில் சொன்னதையே மீண்டும் கடும்கோபத்துடன் சொல்லிவிட்டு அந்த அரைக்கதவைத் திறந்தார்.

நானும் ஜீவாவை தொடர்ந்து வெளியே இறங்கினேன். வீதியின் நடைபாதையில் நடக்கும்போது, ஜீவா " அந்த சாரதி என்னசொன்னான்...? ஏதோ கோபத்தில் சொன்னதுபோன்று இருந்தது, சொல்லும் அவன் என்ன சொன்னான்...? " எனக்கேட்டார்.

நான் " சிங்களத்தில் மொனவத என்பது என்ன...? என்னவாம்..? என்று பொருள்படும் " என்று விளக்கம் அளித்தேன். ஆனால்

அவன் கோபத்துடன்தான் சொன்னான் என்றும் மேலும் விளக்கினேன்.

அவ்வளவுதான். அதற்குப்பிறகு  அந்தச்  சம்பவம் பற்றி ஜீவா பேசவேயில்லை.

சுமார் நான்கு மாதங்கள் கழித்து ஜீவா அம்மாதத்திற்குரிய மல்லிகை இதழ் அச்சுவேலைகளை முடித்துக்கொண்டு பிரதிகளுடன் மதியம் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் ரயிலேறி கொழும்பு கோட்டைக்கு வருகிறார்.  இரண்டாம் குறுக்குத் தெருவில் பாங்ஷால் வீதி சந்தி வரும் இடத்தில் அமைந்துள்ள ஓரியண்டல் சலூனில்தான் அவர் கொழும்பு வரும்போது தங்குவது வழக்கம்.

அன்று இரவு அவர் கோட்டைக்கு ரயில் நிலையத்தில் வந்து இறங்கியதும் குறிப்பிட்ட வீதியால் நடந்து வந்துகொண்டிருந்தார்.

அவரது கையில் அவர் வழக்கமாக எடுத்துவரும் பேக். அதில் அவரது சில மாற்றுடைகளும் மல்லிகை பிரதிகளும்தான் இருக்கும்.

ஜீவாவை வெள்ளை வேட்டி, நேஷனல் தோற்றத்தில் கொழும்பில்  பார்த்தால் தென்னிலங்கை சிங்களவர் என்ற பார்வையும் எவருக்கும் தோன்றலாம்.

ஜீவா மாத்தறை பக்கமிருந்து வரும் வர்த்தகராக இருக்கவேண்டும். அவரது பேக்கில் நிறைய பணம் இருக்கலாம் என நம்பிக்கொண்டு இரண்டு கேடிகள் அவரை பின்தொடர்ந்தனர்.

மழையும் தூறிக்கொண்டிருந்தது.  ஜீவாவுக்கு குலை நடுக்கம். ஜீவா,  பின்தொடருபவர்கள் தன்னிடமிருக்கும் பேக்கை பறிப்பதற்குத்தான் வருகிறார்கள் என எண்ணிக்கொண்டு தனது நடையை தாமதிப்பதும் துரிதப்படுத்துவதுமாக பயத்துடன் வருகிறார்.

பேக்கில் பணம் இல்லை. ஆனால், கத்தியை காட்டி குத்திவிடுவார்களோ என்ற பயம் சூழ்ந்தது. பொறுத்துப்பொறுத்து நடந்தார்.

அப்பொழுது அவருக்கு மின்னலென பழைய  பஸ் பயண சம்பவம் நினைவுக்கு வருகிறது.

வேகமாக திரும்புகிறார்.  கையிலிருந்து பேக்கை தரையில் வைக்கிறார். தனது நேஷனல் கைபகுதியை  மேற்புறமாக மடிக்கிறார். குனிந்து வேட்டியை மடித்து சண்டிக்கட்டு கட்டுகிறார்.

ஆக்ரோஷத்துடன்,  "  மொனவத..?  " எனக்கேட்கிறார்.

அவரை பின்தொடர்ந்த அந்தக்  கேடிகள் மௌனமாக திரும்பிச்சென்றார்கள்.

தாமதிக்காமல் வேட்டியையும் உயிர்த்திப்பிடித்தவாறு பேக்கையும் தூக்கிக்கொண்டு வியர்க்க விறுவிறுக்க விரைந்து நடந்து ஓரியண்டல் சலூன் படிகளில் ஜீவா  ஏறினார்.

**---0---**

## மாற்றுக் கருத்தாளரை நேசித்தவர்

கொழும்பு சாகிறாக்கல்லூரியின் அதிபராகவும் செனட் சபை உறுப்பினராகவும் இருந்தவரான அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸ் அவர்கள் தினகரன் முன்னாள் ஆசிரியர் இ. சிவகுருநாதன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, எழுத்தாளர் எச்.எம்.பி. மொகிதீன் ஆகியோரின் பேராசானுமாவார்.

அஸீஸ் அவர்கள் மறைந்தவுடன் நடந்த இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட எச். எம்.பி. மொகிதீனிடம், எமது ஆசான் பற்றிய நினைவுகளை தினகரனில் தொடர்ந்து எழுதித்தருமாறு சிவகுருநாதன் கேட்டதற்கு இணங்க ஒரு தொடர் கட்டுரையை மொகிதீன் எழுதினார்.

பலராலும் விரும்பிப்படிக்கப்பட்ட அந்தத் தொடர் பின்னர் நூலாக வெளிவந்தது, அந்த நூலுக்கு எதிர்வினையாக மூன்றுபேர் இணைந்து ஒரு விமர்சன நூலை எழுதியிருந்தனர். அதனை எழுதியவர்கள் மூன்று முஸ்லிம் எழுத்தாளர்கள்.

ஏ. இக்பால், எம். எஸ். எம். இக்பால், எம். எச். எம். ஷம்ஸ் ஆகிய அம்மூன்று எழுத்தாளர்களும் இலக்கிய விமர்சனங்களிலும் ஈடுபடுபவர்கள்.

அந்த எதிர்வினை நூலின் முன்னுரை மாத்திரம் சுமார் **60** பக்கங்கள். அதில் பல எழுத்தாளர்களையும் கைலாசபதி, மற்றும் நூலகர் கமால்தீன் முதலான இலக்கிய விமர்சகர்களையும் கர்ணகடூர வார்த்தைப்பிரயோகங்களில் அம்மூவரும் சாடியுமிருந்தனர். எழுத்தாளர்களில் பிரேம்ஜி, இளங்கீரன், இளம்பிறை **ரஹ்மான்** , டொமினிக்ஜீவா மற்றும் எஸ்.பொ. ஆகியோர் கடும் விமர்சனத்திற்குள்ளாகியிருந்தனர்.

அதனைவாசித்திருக்கும் எஸ்.பொ.வைத்தவிர ஏனையோர் மௌனமாகவே அமைதிகாத்தனர். ஆனால், எஸ்.பொ. சும்மாவிடுவாரா..? அந்த விமர்சன நூலுக்கு எதிர்வினையாக ஒரே இரவில் **இஸ்லாமும் தமிழும்** என்ற நூலை எழுதி வெளியிட்டு இலக்கிய உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டார்.

ஏ. இக்பால் தர்கா நகரிலும், ஷம்ஸ் திக்குவல்லையிலும் ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள். ஆனால், எம். எஸ்.எம். இக்பால், கொழும்பில் இளம்பிறை அச்சகம் அமைந்திருந்த ஆட்டுப்பட்டித் தெருவுக்கு சமீபமாக மத்தியமகா வித்தியாலயம் வீதியில் மணிக்கூட்டு கோபுரத்துக்கு சமீபமாக ஒரு தோட்டக்குடியிருப்பில் வாழ்ந்தவர்.

எஸ்.பொ. , தமது இஸ்லாமும் தமிழும் நூலில் அந்த மூவரையும் " **இக்குவால்ஷ்** " என்று அடைமொழியிட்டு கேலியாக வர்ணித்து அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையையும் விமர்சித்து எழுதிவிட்டார்.

அதனால், வெகுண்டெழுந்த எம். எஸ். இக்பால், எஸ்.பொ.வை தாக்குவதற்கும் தயாரானார் என்று செய்திகள் உலாவின.

எனினும் அந்த இக்பால், தொடர்ந்தும் இலக்கிய மேடைகளில் குறிப்பிட்ட பேராசிரியரையும் நூலகரையும் மற்றும் அந்த எழுத்தாளர்களையும் தொடர்ந்து விமர்சித்து வந்தார்.

ஒரு சமயம் , கொள்ளுப்பிட்டி தேயிலை பிரசார சபை மண்டபத்தில் , மறைந்த எழுத்தாளர் அ.ந. கந்தசாமியின் நினைவேந்தல் கூட்டம் கலைஞர் லடீஸ்வீரமணியின் தலைமையில் நடந்தபோது, பேராசிரியர் கைலாசபதியை முன்வரிசையில் வைத்துக்கொண்டே எம். எஸ். எம்.இக்பால், கடுமையாக உரத்த குரலில் பேசினார். கைலாஸ், சில நிமிடங்களில் மெதுவாக எழுந்து பின்வழியால் நழுவிச்சென்றுவிட்டார். கைலாஸின் இயல்பு அத்தகையது !

நான் இலக்கியப்பிரவேசம் செய்த காலப்பகுதியில், எம். எஸ்.எம். இக்பாலுடன் நெருங்கிப்பழகவும் அஞ்சுவேன். அவர் கடுமையாக விமர்சித்தவர்கள் அனைவரும் எனதும் நண்பர்கள்.

அவரது வீட்டுக்கும் சென்றிருக்கின்றேன். அவரது வீட்டில் புத்தகங்கள் – இதழ்கள் சிறு குன்றுபோன்று குவிந்திருக்கும். பலரும் உசாத்துணைக்காக அவரிடம் புத்தகங்கள் வாங்கிச் செல்வார்கள்.

இரவல் கொடுத்த புத்தகங்களையும் மீண்டும் வாங்கிவிடுவதிலும் அவர் மிகவும் கறாரானவர்.

என்னைக்காணும் சந்தர்ப்பங்களில் அவர் டொமினிக்ஜீவாவையும் கடுமையாக விமர்சிப்பார். அறிஞர் கமால்தீனை கலாசார கழுகு என்று வர்ணிப்பார்.

அவ்வாறு சிலருக்கு இலக்கியப் பகைவனாக விளங்கிய அவர் ஒரு நாள் திடீரென மாரடைப்பு வந்து இறந்துவிட்டார்.

அன்று நான் வீரகேசரியில் இரவுக்கடமையிலிருந்தேன். டொமினிக்ஜீவாவும் கொழும்பு வந்து ஸ்ரீகதிரேசன் வீதியில் தங்கியிருந்தார்.

அன்று இரவு, ஜீவாவுடன் சேர்ந்து இரவு உணவுண்பதற்காக ஜீவா தங்கியிருந்த இடத்திற்கு வந்தேன். அப்பொழுது எம். எஸ். எம். இக்பால் திடீரென இறந்துவிட்ட செய்தியை அவரிடம் சொன்னேன்.

" பூபதி.... அவரது வீடு தெரியுமா...? " என்று ஜீவா கேட்டார்.

" வரும்வழியில்தான் இருக்கிறது " என்றேன்.

" சரி வாரும். சாப்பாட்டை பற்றி பிறகு யோசிப்போம். முதலில் அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்கு செல்வோம் " என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டார்.

என்றைக்குமே எம். எஸ்.எம். இக்பால் வீட்டுக்குச்சென்றிருக்காத ஜீவா, அன்று சொன்ன வார்த்தைகள் இவை: " சக எழுத்தாளன் – அவர் என்னைப்பற்றி மாறுபட்ட கருத்தும், கடும் விமர்சனமும் கொண்டிருந்தாலும், அன்னார் மறைந்துவிட்டார் எனத் தெரிந்தால், பழையதையெல்லாம் நினைத்துப்பார்க்கலாகாது, அவரது ஆத்மா சாந்தியடையவேண்டும். வாரும் செல்வோம். "

நாமிருவரும் எம்.எஸ்.எம். இக்பால் வீட்டுக்குச்சென்றோம். என்னை அங்கிருந்தவர்கள் அறிவார்கள். வெள்ளை நேஷனலும் வேட்டியுமாக ஒரு பிரமுகர் வந்திருக்கிறாரே... இவர் யார் என்று அங்கிருந்த சிலர் கேட்டதும், நான் " இவர்தான் மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா. யாழ்ப்பாணத்திலிருந்து வந்துள்ளார் " என்றேன்.

அவர்கள் ஜீவாவை விநோதமாகப்பார்த்தார்கள்.

அதன்பிறகு ஜீவா என்னை அழைத்துக்கொண்டு அந்த இரவுவேளையில் ஆமர்வீதிக்கு வந்து என்னுடன் அம்பாள் கபேயில் உணவருந்திவிட்டு, கிராண்ட் பாஸ் வீதியில் வீரகேசரி வரையிலும் நடந்துவந்து என்னை விட்டுவிட்டு திரும்பி நடந்தே தனது இருப்பிடம் சென்றார்.

**வெற்றிலையும் புகையிலையும் !!**

ஜீவாவின் ஆழ்ந்த நேசத்திற்குரிய நண்பரும், உரும்பராய் அச்செழுவைச்சேர்ந்தவரும் எழுத்தாளரும், கொழும்பில் ஓரியண்டல் சிகையலங்கார நிலையம் நடத்தியவரும், பின்னாளில் ஜீவாவின் சம்பந்தியாகியவருமான எஸ்.வி. தம்பையா அண்ணர், உலகப்பிரசித்திபெற்ற குருமகராஜின் தீவிர பக்தர்.

ஜீவா நீண்டகாலமாக வெற்றிலை சப்பும் பழக்கமுள்ளவர். தம்பையா அண்ணர் புகையிலை சப்புவார்.

ஒருசமயம் குருமகராஜ் கொழும்பு வந்திருந்தார். அவரைச்சந்திக்கச்சென்ற தம்பையா அண்ணர், அவரது அறிவுரையைக்கேட்டு, புகையிலை சப்பும் பழக்கத்தை கைவிட்டார்.

அவரைச்சந்தித்து அவரது அருளுரையை ஜீவாவும் கேட்டால், ஜீவாவும் வெற்றிலை சப்பும் பழக்கத்தை கைவிட்டுவிடுவார் என்று நம்பிக்கொண்டு, ஒருநாள் ஜீவாவை, குருமகராஜிடம் அழைத்துச்செல்லத்தீர்மானித்தார்.

ஜீவா கொழும்பு வந்தவேளையில் தம்பையா அண்ணர் ஜீவாவை குருமகராஜை தரிசிக்கவருமாறும் அவரிடம் அருளுரை பெற்றால், நீங்களும் இந்த வெற்றிலை சப்பும் பழக்கத்தை கைவிட்டுவிடுவீர்கள் என்று சொல்லி வருமாறு கட்டாயப்படுத்தினார்.

உடனே ஜீவா, " நீங்கள் குருமகராஜை தரிசித்தமையால்தான் புகையிலை சப்பும் நீண்ட கால பழக்கத்தை நிறுத்திவிட்டதாகச்சொல்கிறீர்கள். இதோ பாரும் இப்பொழுதே நான் எவரையும் சந்தித்து அருளுரையோ ஆசியோ கேளாமல், உடனடியாக வெற்றிலைபோடுவதை நிறுத்துகிறேன். என்ன பந்தயம் ..? " எனக்கேட்டார்.

" ஜீவா அண்ணர்.... அது உங்களால் முடியாத காரியம். வாருங்கள் குருமகராஜிடம் செல்வோம். அவரது அருளுரை கேட்போம். நீங்களும் என்னைப்போன்று இந்தப்பழக்கத்தை விட்டுவிடுவீர்கள் " எனச்சொல்லி வருந்தி அழைத்தார்.

இதுபோன்ற நம்பிக்கைகள் அற்று, தன்னம்பிக்கையையே மூலதனமாகக்கொண்டு வாழ்ந்தவரான ஜீவா, வாயிலிருந்த வெற்றிலையை துப்பிவிட்டு வாயை தண்ணீரால் சுத்தம் செய்துகொண்டு, அந்தக்கணமே வெற்றிலை போடுவதை நிறுத்திக்கொண்டார். அதன்பிறகு அவர் மறையும் வரையில் பல வருடங்கள் வெற்றிலையை தொடவே இல்லை.

ஆனால், தம்பையா அண்ணர் சில மாதங்களில் மீண்டும் புகையிலை சப்பினார்.

இன்று இருவரும் இல்லை. ஜீவாவுக்கு முன்னர் **09 – 01- 2002** ஆம் திகதி தம்பையா அண்ணர் மறைந்துவிட்டார்.

ஜீவா பின்னாளில் தனது அறையில் தம்பையா அண்ணரின் உருவப்படத்திற்கு தினமும் பூச்சொரிந்து வணங்கினார் என்பதும் நம்பகமான  செய்தி !

**சுஜாதாவின் இன்ஸ்பெக்டர்  இராஜேந்திரன்….!!!**

ஜீவா அடிக்கடி சென்னைக்கு இலக்கிய சுற்றுலா செல்வது வழக்கம். ஒரு தடவை அவர் சென்னையில் எங்கோ செல்வதற்கு டாக்சியில் பயணித்தார்.

இறங்கும் இடம்வந்ததும், அந்த டாக்சி சாரதி மீற்றருக்கு மேல் பணம் கேட்டார்.  ஜீவா மேலதிகமாக தரமுடியாது என்று மறுத்தார். சாரதியும் விடுவதாயில்லை.  வாக்குவாதம் முற்றிய நிலையில், ஜீவாவுக்கு சடுதியாக எழுத்தாளர் சுஜாதாவின் மர்மக்கதைகளில் பாத்திரமாக வரும் இன்ஸ்பெக்டர் இராஜேந்திரன் நினைவுக்கு வந்தார்

 “ ஐஸே… அதிகம் கரைச்சல் கொடுத்தால், இன்ஸ்பெக்டர் இராஜேந்திரனிடம் சொல்வேன்  “ எனச்சொல்லிக்கொண்டு அந்த டாக்சியின் இலக்கத்தகடை பார்த்து காகிதத்தில் எழுதினார்.

 “ வேணாம் சார்.  இந்த சிலோன்காரங்களே இப்படித்தான்  “ எனச்சொல்லிக்கொணடு டாக்சியை செலுத்திச்சென்றார்.

இந்தச்  சம்பவம் பற்றி ஜீவா என்னிடம் ஒரு தடவை சொல்லியிருந்தார்.

சுஜாதாவின் கற்பனைப்பாத்திரம் அன்று அவரை அந்த சாரதியிடமிருந்து மீட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு சென்னைக்கு ஜீவாவையும் வரச்சொல்லிவிட்டு, நானும் அவுஸ்திரேலியாவிலிருந்து

சென்றிருந்தேன். நானும் அவரும் சென்னையில் பல இடங்களுக்கும் பயணித்தோம்.

ஒருநாள் இருவரும் டாக்சியில் சென்றபோது அந்த டாக்சி சாரதி மீற்றருக்கு மேல் பணம் கேட்டார்.

நானும் அந்தச் சாரதியுடன் வாதிட்டேன். எனக்கு பழைய ஞாபகம் வந்தது.

" என்ன ஜீவா...., இன்ஸ்பெக்டர் இராஜேந்திரனுக்கு சொல்வோமா..? "என்றேன்.

" யார் சார் இன்ஸ்பெக்டர் இராஜேந்திரன்..? " என்று கேட்டார் அந்தச் சாரதி. நான் ஜீவாவைப்பார்த்து கண்ணை சிமிட்டினேன்.

ஜீவா சிரிப்பை அடக்கிக்கொண்டு, " பூபதி... சரி... சரி....கேட்பதைக்கொடும் " என்றார்.

நானும் மீற்றருக்கு மேல் கேட்டதை கொடுத்தேன்.

அந்த டாக்சி சென்றதும், " என்ன ஜீவா... ? இப்படிச்சொல்லிவிட்டீர்களே...? " என்றேன்.

" அது ஐஸே... அன்று நான் இலங்கையிலிருந்து வந்தமையால் அவ்வாறு சொன்னேன். நீர் அவுஸ்திரேலியாவிலிருந்து அல்லவா வந்திருக்கிறீர்... அதுதான் அப்படிச் சொன்னேன். ரூபாவுக்கும் டொலருக்கும் வித்தியாசம் இருக்கிறது ஐஸே.... " என்றாரே பார்க்கலாம் !

**---0---**

# ஆறும் அறுபதும்

மல்லிகை ஜீவாவின் 60 வயது மணிவிழா 1987 ஆம் ஆண்டு வந்தது. அக்காலப்பகுதியில் அவரது அந்த பிறந்த தினக்கொண்டாட்டம் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல சோவியத்தின் தலைநகரம் மாஸ்கோவிலும் நடந்தது.

ஜீவா அங்கே சென்றபோது லுமும்பா பல்கலைக்கழக மாணவர்கள் அவரை அழைத்து கேக்வெட்டி அவரது பிறந்ததினத்தை கொண்டாடினார்கள்.

அவர் தாயகம் திரும்பியவேளையில் இலங்கையில் அமைதி ( ? ) காக்க வந்த இந்தியப்படைகள் நிலைகொண்டிருந்தன. அக்காலப்பகுதியில் நான் அவுஸ்திரேலியாவிலிருந்து செய்திகளை அவதானித்துக்கொண்டிருந்தேன். யாழ்ப்பாணத்தில் புலிகளும் இந்தியப்படைகளும் மோதத்தொடங்கியதால் மக்கள் வீடு வாசல்களை விட்டு அகதிகளாக வெளியேறி நல்லூர் கந்தசாமி கோயிலைச்சுற்றி கிடைத்த இடங்களில் தஞ்சமடைந்தார்கள்.

ஜீவாவும் தனது குடும்பத்தினருடன் நல்லூரில் அகதிக்கோலத்தில் இருந்தார்.

அவருடைய நண்பரும் மல்லிகையின் முகப்பு அட்டையில் இடம்பெற்ற பல புகைப்படங்களை எடுத்தவரும் யாழ். பேபி போட்டோ என்ற ஸ்ரூடியோவை எளிமையாக நடத்திக்கொண்டிருந்தவருமான இராசரட்ணமும் அந்தப்பக்கமாக வந்துள்ளார்.

தோளில் ஒரு துண்டுசகிதம் எதிர்ப்பட்ட ஜீவாவைக்கண்டதும், இராசரட்ணம் திகைத்தார். தான் தஞ்சமடைந்திருந்த ஒரு வீட்டின் விறாந்தாவுக்கு ஜீவாவை அழைத்துச்சென்றார்.

“ எமது அகதிவாழ்வை நினைவுபடுத்துவதற்கு ஒரு படம் எடுப்போம் ” என்று ஜீவாவை நிற்கச்சொல்லிவிட்டு, கெமராவை சரிசெய்தார்.

அப்பொழுது அவரது ஆறுவயது பாலகி மோகனா, “நானும் நானும் ” என்று துள்ளிக்குதித்தாள். அவள் ஜீவாவுக்கு மிகவும் பிரியமான செல்லக்குழந்தை.

“ வாம்மா... வா.. ” எனக்கொஞ்சியவாறு அவளை ஜீவா தூக்கிக்கொண்டார்.

ஒளிப்படக்கலைஞர் இராசரட்ணம் தனது கெமராவை இயக்கினார்.

அந்தக்காட்சியை அருகிலிருந்து பார்த்த ஜீவாவின் மகன் திலீபன் உடனே **“ ஆறும் அறுபதும் “** என்றான்.

அந்தப்படம்தான், மல்லிகை ஜீவா மணிவிழாக்குழுவினரால் 1988 ஜூன் மாதம் வெளியிடப்பட்ட மல்லிகை ஜீவா தொகுப்பு நூலின் முப்பில் இடம்பெற்றது.

இந்த நூலை எமது மூத்த எழுத்தாளர்கள் தெணியானும் – டாக்டர் நந்தி சிவஞானசுந்தரமும் தொகுத்திருந்தனர்.

## நிழலும் நிஜமும்

தமிழ்நாட்டில் தி. நகரில் அந்த பிரபலமான இல்லம் சோபையிழந்திருந்தது. ஒரு காலத்தில் காலைவேளையில் அந்த இல்லத்தின் முன்பாக அடுத்தடுத்து பல கார்கள் வரிசையாக தரித்து நிற்கும்.

அதில் வந்திருப்பவர்கள், திரைப்பட இயக்குநராக – தயாரிப்பாளராக – இசையமைப்பாளராக - அல்லது இவர்களின் உதவியாளராக யாராவது காத்திருப்பார்கள்.

நானும் மல்லிகைஜீவாவும் அந்த இல்லத்திற்கு சென்றிருந்தவேளையில் அவ்வீட்டின் இல்லத்தரசி மறைந்து அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டிருந்தது.

அந்த ஆண்டு 1990 – மாதம் ஏப்ரில்.

நான் இரண்டு நாட்களுக்கு முன்பே சென்னை சென்றுவிட்டேன். ஜீவா இலங்கையிலிருந்து இரண்டு

நாட்களில் எனது குடும்பத்தினருடன் சென்னை வந்து சேர்ந்தார்.

விமானநிலையத்தில் அனைவரையும் வரவேற்கச் செல்லுமுன்னர் அந்த பிரபல்யமான இல்லத்தில்தான், பல திரையுலகப்பிரமுகர்களை சந்தித்தேன். அவர்களுக்குள் அரசியல் பிரமுகர்களும் காணப்பட்டனர்.

"காலங்களில் அவள் வசந்தம்.... " என்ற பாடலை அந்த வீட்டின் சொந்தக்காரர் யாரை மனதிலிருத்தி பாடியிருந்தாரோ, அந்த அம்மணி, அவரிடமே சென்றுவிட்டிருந்தார்.

நாம் பார்த்துக்கொண்டிருந்தது அம்மணியின் உயிரற்ற உடலைத்தான்.

யார் அவர்...? யார் அந்த அம்மணி என்பது இப்போது வாசகர்களுக்கு புரியும் !

தயாரிப்பாளர் பஞ்சு அருணாசலம், சோகத்துடன் தலையை தொங்கப்போட்டுக்கொண்டு சிகரட்டை ஊதிக்கொண்டிருந்தார். கவியரசரின் தம்பியும் உதவியாளருமான கண்மணி சுப்பு பலருக்கும் தகவல் சொல்லிக்கொண்டிருந்தார். இயக்குநர் சந்தான பாரதி, வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் சொல்லிக்கொண்டிருந்தார். இயக்குநர் கலைவாணன் கண்ணதாசனும் கவிஞர் முத்துதாசனும் நானும் ஏற்கனவே அங்கு வந்துவிட்டிருந்தோம். விமானநிலையத்திற்கு செல்லவேண்டிய அவசரத்தில் நான் இருந்தேன்.

" நீண்ட இடைவெளிக்குப்பின்னர் பிள்ளைகளை பார்க்கப்போகிறீர்கள், புறப்படுங்கள் " என்று என்னை வழியனுப்பிவைத்தார் காந்தி கண்ணதாசன்.

விமான நிலையத்தில் கொழும்பிலிருந்து வரும் ஏயார் லங்கா விமானம் சற்று தாமதமாக வந்துசேர்வதற்கு இரவு ஒன்பதுமணியாகிவிட்டது.

எனது குடும்பத்துடன் ( அம்மா – மனைவி – பிள்ளைகளுடன் ) ஜீவாவும் வந்துசேர்ந்தார்.

சுமார் மூன்றரை வருடங்களின் பின்னர் அனைவரையும் பார்க்கின்றேன். வாகனத்தில் தங்கும் விடுதிக்குத் திரும்பும்போது ஜீவாவின் காதில் மெதுவாக, " கண்ணதாசன் மனைவி பார்வதி அம்மா இறந்துவிட்டார்கள் " எனச்சொல்கிறேன்.

“ இரவாகிவிட்டது. நீண்ட இடைவெளிக்குப்பின்னர், இப்போதுதான் குடும்பத்தை பார்க்கிறீர். இப்போது செல்லவேண்டாம். நாளை காலையிலேயே சென்று அஞ்சலி செலுத்துவோம் “ என்றார் ஜீவா.

கண்ணதாசன் மீது ஜீவா மிகுந்த நேசமும் மரியாதையும் வைத்திருந்தவர். கண்ணதாசனுக்கு 1977 ஆம் ஆண்டு ஐம்பது வயது பிறந்த தினம் வந்தபோது ஜனசக்தியில் அறந்தை நாராயணன், கண்ணதாசன் பற்றி எழுதியிருந்த கட்டுரையை மல்லிகையில் மறுபிரசுரம் செய்திருந்தார்.

இலங்கைக்கு கண்ணதாசன் வருகை தந்த காலத்திலும் சந்தித்தார். தமிழகம் செல்லும் சந்தர்ப்பங்களிலும் சந்தித்தார். “ கண்ணதாசன் பழகுவதற்கு எளிமையானவர். அவரிடம் பந்தாக்கள் இல்லை “ என்றெல்லாம் ஜீவா சொல்லிக்கேட்டிருக்கின்றேன்.

அத்துடன் கண்ணதாசன் பதிப்பகத்தை நடத்திவரும் காந்திகண்ணதாசனையும் ஜீவா நன்கறிந்தவர். அதனால், திருமதி பார்வதி அம்மா கண்ணதாசன் மறைவு பற்றி அவரிடம் சொன்னேன்.

மறுநாள் காலை ஏழுமணிக்கே நானும் ஜீவாவும், கோடம்பாக்கத்தில் அந்த விடுதியில் குடும்பத்தினரை விட்டுவிட்டு, சென்றோம்.

பார்வதி அம்மாவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு, காந்தியிடத்திலும் அவரது குடும்பத்தினரிடத்திலும் அனுதாபம் சொல்லிவிட்டு முற்றத்தில் வந்து ஆசனங்களில் அமர்ந்து பத்திரிகைகளை படித்துக்கொண்டிருந்தோம்.

அக்காலை வேளையில் அங்கு அஞ்சலி செலுத்த வந்தவர்களின் எண்ணிக்கை மிக மிக குறைவு.

அப்போது ஒரு பெரியவர் வெள்ளை வேட்டி அரைக்கை சேர்ட் அணிந்து தனது பருத்த சரீரத்தை அசைத்தவாறு வந்துகொண்டிருந்தார். யாரோ வர்த்தக பெரும்புள்ளி என நினைத்துக்கொண்டு நானும் ஜீவாவும் பத்திரிகைகளில் மூழ்கியிருந்தோம்.

வந்தவர் தனது மனைவியுடன் இல்லத்துக்குள் சென்றுவிட்டு சொற்பவேளையில் அவர் மாத்திரம் வெளியே வந்தார். காந்திகண்ணதாசன் அவருக்கு அருகில் பேசிக்கொண்டுவந்து அவரை ஆசனத்தில் அமரவைத்தார். அந்த ஆசனத்திற்கு

அருகில்தான் நானும் ஜீவாவும் மற்றும் இரண்டு ஆசனங்களில் அமர்ந்திருந்தோம்.

அந்தப்பெரியவரின் கண்கள் சிவந்திருந்தன. அப்படி சிவந்த கண்களை எங்கோ பார்த்ததுபோன்று ஒரு நினைவு மின்னலாக வந்தது. சிலர் அவருக்கு முன்னால் வந்து வணங்கினார்கள்.

சிலர் எழுந்து நின்றார்கள். நான் கூர்ந்து பார்த்தேன். அருகில் அமர்ந்திருந்தவர் நடிகர்திலகம் சிவாஜிகணேசன். ஜீவாவுடன் கண்களால் பேசி, சிறிய உதட்டசைவோடு சொன்னேன்.

அதன்பிறகுதான் நாமிருவரும் அவரைப்பார்த்து புன்னகைத்தோம். பதிலுக்கு அவரிடமிருந்து இறுக்கமான புன்னகைதான் வந்தது.

நாம் முதலிலேயே எழுந்து நின்று மரியாதை செலுத்தியிருக்கவேண்டும் என்று அவர் நினைத்தாரோ தெரியவில்லை.

பூதவுடலுக்குத்தானே நாம் எழுந்து நின்று மரியாதை செலுத்தவேண்டும் !

அவரது சாரதி அவருக்கு அருகில் தொடர்ந்தும் கால்கடுக்க நின்றுகொண்டிருந்தார்.

அவர் கண்களாலே சாரதிக்கு சைகை காட்டினார். அவரது கண்கள் ஆயிரம் அர்த்தங்களுடன் திரைகளிலும் பேசும். அவர் நவரசத்திலகமல்லவா..?

அவரது சாரதி சென்று இல்லத்தினுள்ளே பெண்களுடன் இருந்த அவரது மனைவி கமலாவை அழைத்துக்கொண்டு வாசலுக்கு வந்தார். அவர் தனது சரீரத்தை அசைத்தவாறு எழுந்து சென்றார்.

ஜீவாவும் நானும் பரஸ்பரம் புன்னகைத்துவிட்டு காந்தி கண்ணதாசனிடம் சொல்லிவிட்டு விடைபெற்றோம்.

" ஐஸே... யார் வந்தது என்று உமக்கும் தெரியவில்லை, எனக்கும் தெரியவில்லை. "

" அவரை மேக்கப்பில் திரையில்தானே பார்த்திருக்கிறோம். நேரில் எங்கே பார்த்தோம். " என்றேன்.

" அவர் தினகரன் விழாவுக்கு வந்தார். தெரியும். எங்கட கைலாசபதி தினகரனில் இருந்த காலத்தில் வந்தார். தினகரன் அவருக்கு ஏதோ பட்டமும் கொடுத்தது... அது..... "

“ கலைக்குரிசில். பிறகு பைலட் பிரேம்நாத், மோகனப்புன்னகை படப்பிடிப்புக்கெல்லாம் வந்தார். வீரகேசரியில் செய்திகள் படங்கள் வெளியிட்டோம். நடிகர்களை சென்று பார்க்கும் ஆர்வம் எனக்கு என்றைக்கும் இல்லை ஜீவா. அதுதான் அவரை நிஜவுருவத்தில் பார்த்தபோது அடையாளம் தெரியவில்லை “ என்றேன்.

“ அதுதான் ஐஸே... நிழலும் நிஜமும் “ என்றார் ஜீவா !

**---0---**

## மல்லிகை ஜீவாவும் ஜெயகாந்தனும்

மல்லிகையில் ஜீவா **1970** களில் எழுதிய **" ஒரு படைப்பாளியைப்பற்றி இன்னொரு சிருஷ்டியாளனின் பார்வை " -** என்ற தொடர் விமர்சனக்கட்டுரை காரசாரமாக நீடித்து ஓய்ந்தது.

அவர் அக்காலப்பகுதியில் ஒவ்வொரு மாதமும் மல்லிகையை வெளியிட்டு, யாழ்ப்பாணத்தில் விநியோகித்துவிட்டு கொழும்புக்கு ரயிலேறிவிடுவார்.

அவரது ஒன்றுவிட்ட சகோதரர் இராசதுரை எமது நீர்கொழும்பூரில் ரோயல் சிகையலங்கார நிலையம் நடத்திக்கொண்டிருந்தார். அதற்குப்பின்புற ஒழுங்கையில் இராசதுரை குடும்பத்துடன் வசித்தார்.

ஜீவா நீர்கொழும்புக்கு வந்தால், மாலைவேளையில் அவரை அழைத்துக்கொண்டு கடற்கரைக்கு வந்துவிடுவோம்.

அச்சந்திப்பில் , அடுத்த மாதம் ஜெயகாந்தன் பற்றி அவர் எழுதவிருக்கும் விடயங்களை எம்மிடம் சொல்வார்.

அவருடன் வாதம் செய்வோம். அவரும் விட்டுக்கொடாமல் தனது தரப்பு வாதங்களை சொல்வார்.

உன்னைப்போல் ஒருவன், இனிப்பும் கரிப்பும், வாழ்க்கை அழைக்கிறது முதலான அடிமட்ட - மத்தியதர வர்க்க

மக்களினது கதைகளையும் சென்னையில் விளிம்பு நிலையில் வாழும் மக்களதும் வாழ்வை சித்திரித்த கதைகளையும் எழுதிவந்த ஜெயகாந்தன், ஆனந்தவிகடனில் மாதாந்தம் முத்திரைக்கதைகள் மகுடத்தில் **500** ரூபா சன்மானத்துடன் எழுதத்தொடங்கியதும், பாரிசுக்குப்போ முதலான மேல்வர்க்க மக்களின் கதைகளை எழுதத் தொடங்கிவிட்டார் என்றும், கம்யூனிஸ்ட் கட்சியின் பாசறையில் வளர்ந்த ஜெயகாந்தன், திடீரென, " தான் எந்தக்கட்சிக்கும் தாலி கட்டிக்கொள்ளவில்லை " என்று அதிரடியாக பிரகடனப்படுத்தியதும்தான் ஜீவாவுக்கு வந்திருந்த தார்மீகக் கோபம்.

எனது மாமா மகள், தேவசேனா அந்தத் தொடருக்கு தேவி என்ற புனைபெயரில் எதிர்வினையாற்றி எழுதியிருந்தார். தேவி என்ற பெயரையும், மல்லிகை இதழின் முகப்பில் அவ்விதழில் எழுதியவர்களின் பெயர்பட்டியலில் ஜீவா பதிவிட்டார்.

தேவியின் எதிர்வினைக்கு மாற்றுக்கருத்தாக ஜீவாவின் வாதங்களை ஆதரித்து, யாழ். போதனா ஆஸ்பத்திரியில் மருத்துவராக பணியாற்றிய ராஜம் தேவராஜன் அடுத்த இதழில் எழுதினார்.

தேவி பின்னாளில் ஜெர்மனிக்கும் ராஜம் லண்டனுக்கும் புலம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

**1984** இல் ஜெயகாந்தனின் மற்றும் ஒரு நாவல் **ஜய ஜய சங்கர** வெளியானது. அந்த நாவலும் வாதப்பிரதிவாதங்களை எழுப்பியது. மீண்டும் ஜீவா அந்த நாவலுக்கு எதிர்வினையாற்றி எழுதினார். ஜீவா , வெளியூர் பயணங்கள், கட்சிப்பணிகளுக்கு மத்தியிலும் நிறைய வாசித்தார். அத்துடன் ஜே,கே.யின் எந்த நூலையும் அவர் தவறவிடவில்லை.

ஜே.கே. பற்றி மற்றவர்கள் எழுதும் குறிப்புகளையும் தேடி எடுத்து படித்துவிடுவார்.

வீரகேசரியில் ஜெயகாந்தன் பற்றிய எனது குறிப்பொன்றில் "முரண்பாடுகளின் மொத்த உருவமாக தற்பொழுது ஜெயகாந்தன் திகழுகின்றார் " என்று ஒரு வரி எழுதிவிட்டேன்.

அதனை யாழ்ப்பாணத்திலிருந்து படித்து விட்டு - மீண்டும் ஒரு தடவை கொழும்பு வந்தசமயம், '' பார்த்தீரா... இப்பொழுதாவது உங்களுக்கெல்லாம் புரிகிறதா...? இதனைத்தானே... நான் அன்றே சொன்னேன்..." என்று வெடிச்சிரிப்புடன் ஜீவா சொன்னார்.

ஆயினும், அவருக்கு ஜே.கே. மீதிருந்த அன்பும் அக்கறையும் குறையவே இல்லை. தான் அவரை விமர்சிப்பது உரிமையுடன்தான் - தமிழக எழுத்தாளர்கள் அம்மாமி கதைகளை எழுதிக்கொண்டிருந்தபொழுது அடிநிலை மக்களின் வாழ்வை வெளியுலகிற்கு தமது இலக்கியப்படைப்புகள் மூலம் உரத்துச்சொன்னவர்.

நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியை புதுமைப்பித்தனுக்கு பின்னர் சரியான திசையில் முன்னெடுத்தவர். தடுமாறி திசை மாறிச்செல்கிறாரோ...? என்ற கோபம்தான் அந்தத்தொடரைத் தான் எழுதியதற்கும் காரணம் என்றார்.

ஆயினும் - எந்த விமர்சனங்களும் ஜெயகாந்தனை பாதிக்கவில்லை. 1984 இற்குப்பின்னரும் ஜே.கே. நிறைய எழுதினார். ஆனால் , சிறுகதைகள் - நாவல்கள் அல்ல. பெரும்பாலும் கட்டுரைகளே எழுதினார்.

ஜெயகாந்தனின் - அந்தரங்கம் புனிதமானது, போர்வை, மௌனம் ஒரு பாஷை, ரிஷி மூலம், ஆடும் நாற்காலிகள் ஆடுகின்றன, சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள், சமூகம் என்பது நான்குபேர், ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் என்பன அவரின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களை சித்திரித்த படைப்புகள்.

ஜெயகாந்தன் ஒருவகையில் தீர்க்கதரிசி. அவர் எழுதியிருப்பதுபோல் காலங்கள் மாறுகிறது. மனிதர்களும் சிலநேரங்களில் ஒருவிதமாகவும் அதே விடயத்தினை பிறிதொரு சந்தர்ப்பத்தில் வேறுவிதமாகவும் சிந்திக்கிறார்கள். ஆனால் - அதனை சந்தர்ப்பவாதம் என்றும் உலகம் சொல்கிறது. உலகம் என்பது என்ன...? சமூகம் என்பது என்ன...? இந்தக்கேள்விகளுக்கெல்லாம் தர்க்கமான பதில்களை தமது படைப்புகளிலும் அதற்கு

மேலும் செறிவேற்றுவதற்கு நீண்ட முன்னுரைகளையும் அவர் தந்தார்.

இன்று **Living together** பற்றியெல்லாம் கதைகள் தமிழில் வருகின்றன. மணிரத்தினத்தின் படமும் 2015 இல் வெளியாகிறது. ஆனால் - ஜெயகாந்தன் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்னரே அத்தகைய கதைகளை எழுதியிருப்பவர்.

ஒருதடவை மல்லிகை ஜீவா தமிழ் நாடு செல்லவிருந்தார். செல்வதற்கு முன்னர் நீர்கொழும்பு வந்து என்னுடன் கலந்துரையாடியபொழுது , தமிழ்நாட்டில் இந்த முறை பயணத்தில் தான் யார் யாரை சந்திக்கவேண்டும் என்று கலந்தாலோசித்தார்.

ஒரு காகிதத்தில் பலரதும் பெயர்களை நினைவுபடுத்தி எழுதினேன். அதில் முதலாவதாக எழுதிய பெயர் ஜெயகாந்தன்.

ஜீவா, தாம் எழுதிய சிறுகதைகள் - கட்டுரைகள் மற்றும் அவரது நேர்காணல்களின் தொகுப்பு, தனது சோவியத் பயணம், வாழ்க்கைச்சரிதம் முதலானவற்றையும் தூண்டில் கேள்வி - பதில் என்பனவற்றையும் மல்லிகைப்பந்தலினால் நூலுருவாக வெளியிட்டிருப்பவர். சில நூல்களை தமிழ்நாடு நியுசெஞ்சுரி புக்ஹவுஸ் (**NCBH**) வெளியிட்டிருக்கிறது. இந்த **NCBH** ஜெயகாந்தன் நூல்கள் சிலவற்றையும் இலங்கையில் தெணியான், அகஸ்தியர், திக்குவல்லை கமால் முதலான முற்போக்கு எழுத்தாளர்களின் நூல்களையும் வெளியிட்டிருக்கிறது.

இந்த நிறுவனம் மாஸ்கோ முன்னேற்றப்பதிப்பகத்தில் பணியாற்றிய கலாநிதி விதாலி ஃபூர்ணிக்காவிற்கும் ஜெயகாந்தனுக்கும் இடையில் நடந்த நீண்ட உரையாடலையும் நட்பில் பூத்த மலர்கள் என்ற தலைப்பில் வெளியிட்டது. அதனை எழுதியவர் ஜெயகாந்தன்.

தமது நூல்கள் பலவற்றை வரவாக்கிய மல்லிகை ஜீவா,பல மாதங்கள் தமது மல்லிகையில் எழுதிய ஒரு படைப்பாளியைப்பற்றி இன்னொரு சிருஷ்டியாளனின் பார்வை என்ற தொடர் விமர்சனக்கட்டுரையை மாத்திரம்

நூல் வடிவில் வெளியிடவே இல்லை ! அதற்கான அவசியமின்றி, ஜே.கே. - ஜீவா நட்புறவு மீண்டும் துளிர்த்தது.

அந்தப்பயணத்தில் ஜீவா தமிழகத்தில் நான் பட்டியலிட்டுக்கொடுத்தவர்களில் பலரையும் சந்தித்து திரும்பியதும் கொழும்பில் நடத்தப்பட்ட மல்லிகைப்பந்தல் சந்திப்பில் ஜீவா நான் அவரிடம் எழுதி தந்துவிட்ட அந்தபட்டியல் காகிதத்தை தமது பொக்கட்டிலிருந்து காண்பித்தார்.

அது சற்று கசங்கி பல மடிப்புகளுடன் இருந்தது. அந்தப்பயணத்தில் கருத்து வேற்றுமைகளை மறந்து ஜீவாவும் ஜெயகாந்தனும் மனம் விட்டுப்பேசியிருக்கின்றனர். தமது காரில் ஜீவாவை வீட்டுக்கு அழைத்து ஜெயகாந்தன் விருந்தும் கொடுத்து உபசரித்தார்.

சரஸ்வதி – தாமரை இதழ்களில் ஜெயகாந்தனும் – ஜீவாவும் எழுதிய காலத்திலிருந்தே நல்ல நண்பர்கள்.

ஜெயகாந்தன், ஜீவாவை மகாபலிபுரத்திற்கும் அழைத்துச்சென்று, ஜீவாவுக்கு தோளில் போர்த்தும் சால்வையும் வாங்கிக்கொடுத்தார்.

அச்சமயம் அந்தச் சால்வையை இருவரும் இணைந்து நின்று போர்த்திக்கொண்டு போஸ் கொடுத்து எடுத்த படத்தை, யாழ்ப்பாணம் மல்லிகை காரியாலயத்தின் சுவரில் ஜீவா மாட்டிவைத்திருந்தார்.

ஜெயகாந்தனை பல தடவை இலங்கைக்கு அழைப்பதற்கு ஜீவா முயன்றார். சோவியத் நாடு, அமெரிக்காவெல்லாம் சென்றுள்ள ஜெயகாந்தன் இலங்கை வரவில்லை என்ற ஏமாற்றம் ஜீவாவுக்கு தொடர்ந்திருந்தது.

ஜீவாவின் கனவாக நீண்ட காலம் திகழ்ந்த சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கும் 2011 இல் ஜெயகாந்தனை அழைத்தோம். 2008 ஆம் ஆண்டு அவர் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்குட்பட்டிருந்தபோது சென்று பார்த்தபோதும், இலங்கைக்கு ஒரு தடவை வருமாறு அழைத்தேன். உங்கள் ஜீவாவுக்காகவாவது வாருங்கள் என்றேன்.

“ தான் வந்தால், அது தனக்கும் பிரச்சினை, உங்களுக்கும் பிரச்சினை, எனது வாய் ஏதாவது சொல்லும்… “ என்று சிம்மக்குரலில் சொல்லிச்சிரித்தார்.

பின்னர் குறிப்பிட்ட மாநாட்டில் கனடா மூர்த்தி இயக்கித்தயாரித்த **உலகப்பொது மனிதன் ஜெயகாந்தன்** ஆவணப்படத்தை காண்பித்தோம்.

அன்று இரவு, அந்த ஆவணப்படத்தை இறுதிவரையில் இருந்து பார்த்துவிட்டுச்சென்றார் ஜீவா.

ஜீவாவின் சாலையின் திருப்பம் சிறுகதைத் தொகுதிக்கு ஜெயகாந்தன் முன்னுரை எழுதினார்.

அதில் ஜெயகாந்தன், **“ எழுத்து ஒரு தொழிலோ பிழைப்போ அல்ல. நமக்கு அது யோகம். அந்த யோகமே நமது ஜீவிதம். நண்பர் டொமினிக்ஜீவாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.. “** என்று எழுதியிருந்தார்.

ஜெயகாந்தன் 2015 ஏப்ரில் மாதம் மறைந்தவேளையில் ஜீவா ஆழ்ந்த வேதனையுற்றார்.

பின்னர், ஜீவா படிப்படியாக பழைய நினைவுகளை மறக்கத்தொடங்கினார்.

**---0---**

# இரண்டு பேராசிரியர்களும் ஜீவாவும்

ஈழத்து இலக்கிய உலகில் பெரிய ஆளுமைகளாக விளங்கிய விமர்சகர்கள் – பேராசிரியர்கள் கைலாசபதி – சிவத்தம்பி ஆகியோர் மீது மல்லிகை ஜீவா பெருமதிப்பும் பேரபிமானமும் கொண்டிருந்தவர்.

சிவத்தம்பி, ஜீவா இணைந்திருந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் ( மாஸ்கோ சார்பு ) அங்கத்துவம்பெற்றிருந்தவர்.

கைலாசபதி சீனசார்பு நிலையெடுத்தவர். எனினும் அக்கட்சியில் ( பீக்கிங் சார்பு ) இணையாமல், தொழிலாளி – செம்பதாகை முதலான இதழ்களில் புனைபெயர்களில் எழுதினார். தேசிய கலை இலக்கியப்பேரவை கைலாசபதியை கொண்டாடியது.

அத்துடன் கைலாஸ் சீனாவுக்குச்சென்று திரும்பி, தமது மனைவி சர்வமங்களத்துடன் இணைந்து **மக்கள் சீனம் - காட்சியும் கருத்தும்** என்ற நூலையும் எழுதினார்.

சிவத்தம்பி, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தார். அத்துடன் இச்சங்கம் நடத்திய மாநாடுகளின்போது தீர்மானங்களை வரைவதற்கும் செயலாளர் பிரேம்ஜி ஞானசுந்தரனுக்கு பக்கத்துணையாக விளங்கினார்.

ஜீவா கைலாசபதியை பன்மையில் மரியாதையுடன் அழைப்பார். ஆனால், சிவத்தம்பியுடன் ஒருமையில் , “ என்னடாப்பா, நீ.... வா... போ....” என்று உரிமையுடன் பேசுவார்.

ஒருசந்தர்ப்பத்தில்  ஜீவாவிடம் இந்த இரண்டு இலக்கியப்பேராளுமைகள்  பற்றியும் உங்களது பார்வை என்ன..?  என்று கேட்டபோது,  ஜீவா பின்வருமாறு தெரிவித்தார்.

அச்சமயம் கைலாசபதி உயிரோடு இல்லை.  அவர் 1982 டிசம்பரில் மறைந்துவிட்டார்.

ஜீவா சொல்கிறார்:

இந்தக்கேள்விக்கு பதில்சொல்வது அத்தனை சுலபமானது அல்ல. ஒரே கேள்வி – பதிலில் சட்டென சொல்லக்கூடியதுமல்ல. இருவரையும் சமகாலத்தில் தெரிந்துகொண்டவன். சமமாகவே தெரிந்துவைத்திருப்பவன்.

மிக நெருக்கமாகவும் பேசிப்பழகியவன். இதில் சங்கடம் என்னவென்றால் ஒருவர் ( கைலாஸ் ) மறைந்துவிட்டார். எனவே கருத்துச்சொல்வதில் கஷ்டம் இதில் உள்ளது.

கைலாசின் மனவுணர்வுகளை லேசில் புரிந்துகொள்ளமுடியாது. உணர்ச்சிகளைக் காட்டிக்கொள்ளவே மாட்டார்.

சிவத்தம்பி அப்படி அல்ல ! குழந்தைப்பிள்ளை. நேசிப்புக்கு மிக நெருக்கமானவர். கைலாசின் நேர் சம்பாஷணையை வைத்து அவரது அறிவின் ஆழத்தை அளவிட்டுவிட முடியாது. ஆனால், சிவத்தம்பியுடன் பேசும்போது, அவரது எழுத்தைவிட அவருடன் சம்பாஷிக்கும் ஒவ்வொரு வேளையும் நான் பிரமித்துப்போவதுண்டு.

இப்படியானவரிடம் நான் ஒரு மாணவனாக ஓரிரு வருடங்கள் இருந்திருந்தால் எத்தனை அறிவுபெற்றிருப்பேன்...? என்று எனது  மனம்  ஏக்கமடைவதுண்டு.

கைலாசின் எழுத்தில் எளிமையும் அதேசமயம் புரிந்துகொள்ளும் தன்மையும் ஆழமும் வியாபித்திருக்கும். அதற்குக்காரணம் அவர் ஒரு வெகுஜனப்பத்திரிகையில் ( தினகரன் ) பொறுப்புவாய்ந்த  ஆசிரியர் பதவி வகித்ததுதான் என்பது என் எண்ணம்.

சிவத்தம்பியின் எழுத்தில் ஆழமும் அகலமும் இருக்கும். அதேசமயம் புரிந்துகொள்வதற்குக் கஷ்டம் என பலபேர் எனக்குச்சொல்லியுள்ளார்கள்.  புதுச்சொற்றொடர்களை பாவிப்பதில் இவர் வல்லவர்.  புரியாமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.  கைலாஸ், மலேசியா – கொழும்பு என வாழ்ந்து – வளர்ந்து பழக்கப்பட்டவர்.

சிவத்தம்பி, கரவெட்டி மண்ணில் ஊறிப்பதப்பட்டவர். இவர்களுடைய இருவேறு ஆளுமைகளுக்கும் இது ஒருவேளை காரணமாக இருக்கலாமோ…?! என நான் எனக்குள்ளே விமர்சித்ததுண்டு.

கைலாஸ், திட்டமிட்டு உழைத்துப் பழகிய அசுரத்தனமான உழைப்பாளி. சிவத்தம்பி அப்படி உழைக்கவேண்டும் என்ற ஆவல் இருந்தாலும் குடும்ப – இனச்சூழ்நிலையால் திட்டமிட்டபடி செயலாற்றமுடியாமல் முடங்கிப்போய்த் தயங்குபவர்.

இருவரும் தமிழ் உலகம் போற்றும் மகா விமர்சகர்கள்தான். ஆனால், இருவரது பாணியும் பார்வையுமே வேறு வேறு ! அதேசமயம் சோஷலிஸ எதார்த்த வாதக்கண்ணோட்டத்தில் சமூகத்தில் இருந்து முகிழ்த்துவந்த படைப்பாளிகளுக்கு இவர்கள் இருவரும் வழங்கிய ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் அளப்பரியன. இதை நன்றியறிவுடன் குறிப்பிடத்தான் வேண்டும்.

கைலாசபதி அறிஞன். சிவத்தம்பி சிந்தனையாளன். மேலும் விரிவாகச் சொல்ல இப்போது சந்தர்ப்பமில்லை. நான் எழுதத் திட்டமிட்டுள்ள எழுத்தாளர் குறிப்பு நூலில் விரிவாகப்பின்னர் எழுதுகின்றேன். “

இவ்வாறு சொல்லியிருக்கும் மல்லிகை ஜீவா, அந்த நூலை எழுதாமலேயே விடைபெற்றுவிட்டார்.

**விசிலடித்த ஜீவா !**

இந்தப்பதிவில் முதலில் நான் குறிப்பிட்ட இரண்டுபேராசிரியர்களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய காலத்தில், அங்கு தமிழ்த்துறையில் பயின்ற பல மாணவர்களும் தமது ஆய்வுகளுக்கு மல்லிகை இதழ்களை நன்கு பயன்படுத்திக்கொண்டனர்.

சிலர் தமது **MPhil** ஆய்வுக்காகவும் யாழ்ப்பாணத்தில் இயங்கிய மல்லிகை காரியாலயத்திற்கு அடிக்கடி வந்துள்ளனர்.

பின்னாளில் பத்திரிகையாளராக வளர்ந்த தேவகௌரியும் யாழ். பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில், மல்லிகை காரியாலயத்திற்கு வந்தார். அதுபற்றி , ஜீவா மறைந்த பின்னர் தேவகௌரி எழுதியிருக்கும் கட்டுரையில் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

“ பாடத்திட்டக் கல்வியில் ஐந்தாம் வகுப்பு மட்டுமே படித்திருந்த டொமினிக் ஜீவாவைத் தேடி, “ 80 களில் ஈழத்து விமர்சனப் போக்கு எப்படி இருந்தது..? ” என்று ஆய்வு செய்வதற்காக, 1991இல் நான், பல்கலைக்கழக மாணவியாக இருந்தபோது, மல்லிகை காரியாலயம் சென்றேன். அப்போது அது அச்சுக்கூடமாக இருந்தது. வாசலில் வெள்ளை வேட்டியும் நஷனலுமாக நின்றிருந்தவர், “வாங்கோ என்ன விசயம்..? ” என்று கேட்டார்? விடயம் சொல்லப்பட்டது. “ எனக்குத் தெரியும், பல்கலைக்கழகம் ஒரு நாள் என்னைத்தேடி வரும் எண்டு ” எனச் சொல்லி, புன்முறுவல் பூத்தார்.

பின்னாளில் தேவகௌரி எழுதிய அந்த ஆய்வு, மல்லிகைப்பந்தல் வெளியீடாகவே நூலுருவில் வந்தது.

யாழ்ப்பாணத்தில் ஜீவா இருந்த காலத்தில் அவரது தினசரி கடமைகளில் ஒன்று வாசிப்பு. காலையில், மல்லிகை காரியாலயம் செல்வதற்கு முன்னர், யாழ். பஸ்நிலையத்திற்கு அருகில் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த பூபாலசிங்கம் புத்தகக்கடை வாசலில் சில நிமிடங்கள் தரித்துநின்று அன்றைய தமிழ்த்தினசரிகளை வாசிப்பார்.

எவரேனும் தெரிந்தவர்கள் அருகில் வந்து, அவரிடம் சுகநலன் விசாரித்துச்செல்வார்கள். அவ்வேளையில் அவர்களிடம் பேச்சை வளர்க்காமல் பத்திரிகைகளின் பக்கங்களிலேயே கவனத்தை கூர்மைப்படுத்தியிருப்பார்.

அவ்வாறு ஒருநாள் காலையில் அவர் அங்கே நின்று பத்திரிகை படித்துக்கொண்டிருந்தபோது, எதிர்ப்பக்கம் தரித்து நின்ற ஒரு காரிலிருந்து விசில் சத்தம் கேட்டது,

ஜீவா விசில் வந்த பக்கம் பார்த்தார்.

அக்காரின் ஆசனத்தில் கனவான் தோற்றத்துடன் அமர்ந்திருந்த ஒருவர், விசில் அடித்து, ஜீவாவை அருகில் வருமாறு கையால் சைகை காட்டினார்.

ஜீவா, “ என்ன ...? ” என்று கேட்டார்.

அந்தக்கனவான் மீண்டும் ஆள்காட்டி விரலால் ஜீவாவை ஒரு பிராணியை அழைப்பதுபோன்ற தோரணையில் கூப்பிட்டார்.

ஜீவாவின் தர்மாவேசம் விழித்துக்கொண்டது.

ஜீவாவும் பதிலுக்கு விசிலடித்து தனது ஆள்காட்டி விரலை நீட்டி அந்தக் கனவானை அழைத்தார்.

அந்த மனிதர் காரை விட்டு எழுந்துவந்தார்.

" என்ன விஷயம்... ? " ஜீவா கேட்டார்.

" எனது மகள் பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். அவளுக்கு ஆய்வுசெய்வதற்கு மல்லிகை இதழ்கள் தேவைப்படுகின்றன. மகள் காருக்குள் இருக்கிறாள். இந்தநேரத்தில் உங்களை இந்த இடத்தில் காணமுடியும் என்று மகள் சொன்னதால் அவளையும் அழைத்துவந்தேன் " என்றார் அந்த மனிதர்.

உடனே ஜீவா, " இது வீதியோரம். பஸ் நிலையம். மல்லிகைக்கென்று ஒரு காரியாலயம் இருக்கிறது. அங்கே மகளை அழைத்துவாரும். இவ்வாறு தெருவில் நின்று விசிலடித்து என்னை அழைக்கவேண்டாம். நானும் ஒரு மனுஷன். உமது வீட்டு செல்லப்பிராணி அல்ல " என்றார்.

**---0---**

# மணிக்கரங்களை மறவாதவர்

மல்லிகை தொடங்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து, ஜீவா அதனை தொடர்ந்து நடத்துவதற்கு பல்வேறு சிரமங்களை அனுபவித்தார்.

பொருளாதார ரீதியில் அவர் பட்ட கஷ்டங்கள் பற்றி, பல சந்தர்ப்பங்களில் பேசியும் எழுதியும் வந்தவர். தொடக்கத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூபாலசிங்கம், அ. வயித்திலிங்கம், ஐ. ஆர். அரியரத்தினம் முதலான இடதுசாரி தோழர்களும் பின்னாளில் பல கலை, இலக்கியவாதிகளும் மல்லிகைக்கு நன்கொடை வழங்கினார்கள்.

ஜீவா தனது நன்றியை வெளிப்படுத்தும்வகையில் **மணிக்கரங்கள்** என்ற பக்கத்தில், நன்கொடை தந்தவர்களின் பெயர்களையும் குறிப்பிடுவதற்கு தவறுவதில்லை.

ஒருசமயம் ஜீவா யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவரை பார்க்கச்சென்றபோது, அந்த வார்டிலிருந்த மற்றும் ஒரு நோயாளி அன்பர், ஜீவாவை தமது அருகில் அழைத்து, தனது தலைமாட்டிலிருந்த தனது பேர்ஸை எடுத்து, அதிலிருந்து சிறிது பணம் கொடுத்து, " இதனை மல்லிகைக்கு வைத்துக்கொள்ளுங்கள் " என்று சொல்லியிருக்கிறார்.

" நீங்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்த நிலையிலும் மல்லிகைக்கு உதவ முன்வந்தமை என்னை நெகிழச்செய்கிறது. இப்போது வேண்டாம். முதலில் நீங்கள் உடல் நலம்தேறி வாருங்கள் . அதன்பிறகு பெற்றுக்கொள்கிறேன் " எனச்சொல்லியிருக்கிறார்.

அதற்கு அவர், " நாளை என்பது நிச்சயமில்லை. பெற்றுக்கொள்ளுங்கள் " என்று கூறி பணத்தை ஜீவாவின் கையில் திணித்துள்ளார்.

இதுஇவ்விதமிருக்க, கொழும்பு புறக்கோட்டையில் ஓரியண்டல் சிகையலங்கார நிலையத்திற்கு ( இதன் உரிமையாளர் எஸ். வீ. தம்பையா பின்னாளில் ஜீவாவின் சம்பந்தியானவர். ) அருகில் அமைந்திருக்கும் கோல்டன் கஃபே ஊழியர்களும் பணம் சேகரித்து மல்லிகைக்கு வழங்கியிருக்கிறார்கள்.

மல்லிகைக்கு தரப்படும் நன்கொடைகள் மல்லிகை இதழ்களில் மணிக்கரங்கள் பக்கத்தில் தவறாமல் இடம்பெறும்.

இவ்வாறு பல கலை, இலக்கிய ஆர்வலர்களின் நன்கொடைகளுடன் வளர்ந்த மல்லிகை இதழ், அதில் எழுதும் படைப்பாளிகளுக்கு என்றைக்குமே சன்மானம் வழங்கியதில்லை. அவ்வாறு வழங்கும் நிலைக்கு அதன் பணபலமும் அதிகரிக்கவில்லை.

அவ்வாறிருந்தும் ஜீவா ஒரு இளம் எழுத்தாளருக்கு ஐம்பது ரூபா சன்மானம் வழங்கியிருக்கிறார் என்ற ஆச்சரியமூட்டும் தகவல், ஜீவா மறைந்தபின்னர்தான் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1980 களில் மாணவியாகவிருந்த **செல்வி கலாநிதி** என்பவர், அங்கே பேராசிரியர்கள் மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு ஆகியோரின் தூண்டுதலினால் அவ்வப்போது மல்லிகைக்கு எழுதிவந்துள்ளார்.

அவரைத் தொடர்ந்தும் எழுதவைப்பதற்காக பேராசிரியை சித்திரலேகா, " தொடர்ந்து எழுது, மல்லிகை ஆசிரியர் உனக்கு சன்மானம் தருவார் " என்று வேடிக்கையாகச் சொல்லியிருக்கிறார்.

அதனையும் நம்பிக்கொண்டு அந்த மாணவி, தனது சகதோழிகளிடம் சொல்லியிருக்கிறார்.

அவர்களும், அந்த மாணவியை ஊக்கப்படுத்தி " எழுது... எழுது... கிடைக்கும் சன்மானத்தில் எமக்கு ஐஸ்கிறீம் வாங்கித்தா " என்று சொல்லியிருக்கின்றனர்.

ஒருநாள், யாழ். பல்கலைக்கழகத்திற்கு மல்லிகை விநியோகிக்க வந்துள்ள ஜீவா, மாணவி செல்வி கலாநிதியை தேடிக்கண்டுபிடித்து, அவரது படைப்பு வெளியான மல்லிகை இதழையும் கொடுத்துவிட்டு, " நன்றாக எழுதுகிறீர். தொடர்ந்து எழுதும். உமது எழுத்துக்கு இதோ என்னால் தரக்கூடிய சன்மானம் என்று சொல்லிவிட்டு, ஐம்பது ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்த அரிய தகவலை, அண்மையில் சுவிஸ் மானுடம் வாசகர் வட்டம் நடத்திய ஜீவா நினைவேந்தல் இணையவழி காணொளி அரங்கில் அன்று செல்வி கலாநிதியாகவிருந்த திருமதி கலாநிதி ஜீவகுமாரன் டென்மார்க்கில் இருந்து உரையாற்றும்போது நன்றியோடு நினைவுபடுத்தினார்.

**புலம்பெயர்ந்து ஓடியவர்கள் காகக்கூட்டமா..?**

**" யு.கே.க்குப்போக யூ.ரி.ஏ ஏறாமல்**
**ஏ.கே. தூக்கி இறந்தவர்கள் எத்தனைபேர்.....?**
**இங்கே பற்பலர் பேசிக்களித்தனர்**
**எம்நாடு எரிகையில் ஓடிப்பறந்தனர்**
**சங்கமாடிய தமிழ் எனப்பேசிய**
**தம்பிமார் எல்லாம் கடலைக் கடந்தனர் "**

இந்தக்கவிதையை எழுதியவர் யார்..? என்பது வாசகர்களுக்கு நினைவுக்கு வருகிறதா..?

இதனை எழுதியவர் மார்க்ஸீயம்பேசிய செ. கணேசலிங்கனின் **குமரன்** இதழ்களில் வரதபாக்கியான் என்ற புனைபெயரிலும் எழுதியவரும் - பின்னாளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து அதன் ஆதர்ச கவிஞராகவும் விளங்கிய **புதுவை இரத்தினதுரை.**

இவ்வாறு புலம்பெயர்ந்து சென்றவர்கள் பற்றி எழுதிய புதுவை இரத்தினதுரையும் சமாதான காலத்தில் புலம்பெயர்ந்தவர்கள் நடத்திய நிகழ்ச்சிகளுக்குச்சென்று திரும்பியவர்தான்.

பின்னாளில் அவரது ஒரே மகளும் ஐரோப்பிய நாடொன்றுக்கு புலம்பெயர்ந்து செல்லநேரிட்டது.

மல்லிகை ஜீவாவும் ஒரு சந்தர்ப்பத்தில் தூண்டில் கேள்வி – பதில் பகுதியில் ஒரு வாசகரின் கேள்விக்கு பதில் சொல்லியிருந்தார்.

**கேள்வி:** யாருக்காக நீங்கள் பச்சாதாபப்படுவதுண்டு..?

**ஜீவாவின் பதில்:** பிரச்சினைகளுக்குப் பயந்து பிறந்த நாட்டையும் வாழ்ந்த வீட்டையும் இனசனங்களையும் விட்டுப் பிறதேசம் ஓடும் காகக்கூட்டத்தைப்பற்றி நினைத்துத்தான் நான் அடிக்கடி பச்சாதாபப்படுவதுண்டு.

இந்தக்கேள்வி – பதில் ஒருபுறம் இருக்கட்டும்.

ஜீவாவின் இரண்டாவது மகள் பிரேமலதா, தான் மணம்முடிக்கவிருந்தவரிடம் சென்று சேர்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து ஜெர்மனிக்குப் புறப்பட்டார். ஜீவா மகளை அழைத்துக்கொண்டு கொழும்பு வந்தார்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் ஜீவாவையும் மகளையும் வரவேற்று அழைத்துவருவதற்கு நண்பர் மேமன்கவி வாகனத்துடன் வந்தார்.

அன்று மாலை, அவர்கள் இருவரையும் நான் அழைத்துக்கொண்டு எமது நீர்கொழும்பூருக்கு வந்து எமது வீட்டில் தங்கவைத்து உபசரித்துவிட்டு, மறுநாள் விமான நிலையத்தில் மகளை வழியனுப்பினோம்.

அந்த மகள் விமானம் ஏறுமுன்னர், " அப்பா... நீங்கள் உங்கள் சொந்த பந்தங்களை அதிகம் நேசிக்காமல், எழுத்தாளர்களுடன்தான் அதிகமாக நட்புறவு கொண்டிருக்கிறீர்கள் என்று ஒரு குற்றச்சாட்டு எங்கள் குடும்பங்களில் இருக்கிறது. ஆனால், ரயில் நிலையத்திற்கு வந்த மேமன் கவியும், நீர்கொழும்புக்கு அழைத்துவந்து தங்கவைத்து உபசரித்து வழியனுப்பும் முருகபூபதியும் எமது சொந்த பந்தங்கள் இல்லை. ஜீவாவின் மகள் என்றவுடன் இவர்கள் ஓடிவந்து உதவியதைப்பார்த்து சிலிர்த்துப்போனேன் அப்பா. இதுதானப்பா நீங்கள் எமக்குத் தேடித்தந்த சொத்து! " எனச்சொன்னார்.

பின்னாளில், ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இலக்கியவாதிகளினால் நடத்தப்பட்ட இலக்கியச்சந்திப்பு ஒன்றுகூடலுக்குச் சென்று திரும்பிய ஜீவாவும் **முப்பெரும் நகரங்களில் முப்பது நாட்கள்** என்னும் பயண இலக்கிய நூலை 2001 ஆம் ஆண்டு எழுதிவெளியிட்டார்.

அதன் முன்னுரையில் ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்:

" ஆரடா சொன்னது... தமிழ் இனி மெல்லச்சாகுமென்று... நிமிர்ந்து... நிமிர்ந்து... நிமிர்ந்து பார் ! உலகம் பூராவும் ஐந்து கண்டங்களிலும் நம்மவன் ! தமிழ்தான் அவன் சிந்தனை. அங்கு தமிழை விதைப்பதற்கு என்னைப்போன்றவனை அழைத்து விழா எடுக்கிறான். தனது மூல ஆணிவேரான பண்பாடு மொழிபற்றி அவனுக்கு எந்தவிதமான தடுமாற்றமுமில்லை. அவனைக்கடந்து இருப்பவர்கள்தான் அவனுடைய பரம்பரையின் எதிர்காலம்பற்றி இங்கிருந்து கவலைப்படுகின்றனர். நான் கவலைப்படவேயில்லை. "

முன்பு புலம்பெயர்ந்தவர்களை காகக்கூட்டம் என்று வர்ணித்த ஜீவா, பின்னாளில் வழங்கிய வாக்குமூலம்தான் இது.

ஜீவா மறைந்தபின்னர், அவரது நினைவுகளை பகிர்ந்துகொள்ளும் இணையவழி நினைவேந்தல் காணொளி நிகழ்வுகள் புகலிட நாடுகளில் தொடருகின்றன.

**----0----**

# மேத்தா தாசனும் ஜீவாவும்

கம்பனுக்கு ஒரு தாசன் இருந்ததுபோன்று ( கம்பதாசன் )
பாரதிக்கு ஒரு தாசன் இருந்ததுபோன்று ( பாரதிதாசன் )
கவிஞர் மேத்தாவுக்கும் ஒரு தாசன் இருந்தார்.

அவர்தான் கவிஞர் **மேத்தாதாசன்.**

கவிஞர் மேத்தா, இஸ்லாமியர். அவரது இயற்பெயர் **முகம்மது மேத்தா.** மேத்தாவின் தாசனாகிய கவிஞர் விஜயராகவன் இந்து பிராமணர்.

இந்தியாவில் இந்துக்கள் - இஸ்லாமியர் முரண்பாடுகள் இந்தியசுதந்திரப்போராட்ட காலத்திற்கு முன்பிருந்தே தொடங்கி பாகிஸ்தான் பிரிவினையின்போது உக்கிரமடைந்து ஆயிரக்கணக்கானோர் பலியான இரத்த வரலாறை படித்திருக்கின்றோம். இந்தப்பின்னணியிலிருந்து மேத்தா – மேத்தாதாசனின் இலக்கிய நேசத்தையும் நட்புறவையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

மேத்தாவிடம் மிகுந்த பிரியமாகவிருந்த விஜயராகவனைப் **(மேத்தா தாசனை)** பார்த்த மேத்தாவின் துணைவியார் ஒரு சந்தர்ப்பத்தில் " நல்லவேளை அவன் பெண்ணாகப்பிறக்கவில்லை. பிறந்திருந்தால் என்பாடு திண்டாட்டம்தான் " என்று வேடிக்கையாகச்சொன்னார்.

அந்தளவுக்கு மேத்தாவை உளமாற நேசித்த கவிஞன்தான் மேத்தாதாசன். அவரை இலங்கைக்கு அழைத்து வந்து எமக்கெல்லாம் அறிமுகப்படுத்தியவர்எழுத்தாளர் **காவலூர் ஜெகநாதன்.**

அந்தப்பயணத்தில் மேத்தாதாசன்

எனதும்  மல்லிகைஜீவா,  கவிஞர் மேமன்கவி ஆகியோரினதும் உற்ற நண்பரானார். மேத்தாதாசனின் கவிதைத் தொகுதி **காகிதக்கனவுகள்**.  நர்மதாபதிப்பகம் வெளியிட்டது.

அவரை முதலில் இலங்கையிலும் பின்னர் 1984 – 1990 ஆம் ஆண்டுகளில் சென்னையிலும் சந்தித்திருக்கின்றேன்

சகோதர வாஞ்சையுடன் உறவாடியவர். மல்லிகை ஜீவாவுக்கும் மேத்தாதாசனுக்கும் இடையே நீடித்திருந்தது  தந்தை – மகன் நேசம். பரஸ்பரம்  இருவரும் உளமாற ஒருவரை ஒருவர் நேசித்தனர்.

ஒரு சமயம் மல்லிகை ஜீவா சென்னை சென்றிருந்தபோது, மேத்தாதாசன் அவருக்கு விருந்தளிக்க விரும்பினார்.  வீட்டுக்கு அழைத்துச்சென்றார்.

ஜீவாவுக்கு  மச்சம் சாப்பிடவேண்டும்.   ஆனால், அந்த பிராமணர் வீட்டில் மச்சம் சமைக்கமாட்டார்கள்.  மேத்தா தாசனின் பெற்றோர்  காப்பி, சிற்றுண்டி வழங்கி உபசரித்தார்கள்.

எனினும் அந்த விருந்துபசாரம் மேத்தாதாசனுக்கு திருப்தியில்லை.
ஜீவாவை அழைத்துக்கொண்டு அசைவ உணவு பரிமாறப்படும் ஒரு உணவு விடுதிக்கு அழைத்துச்சென்றார்.

“  அய்யா… உங்களுக்குத் தெரியும்தானே… நான் மச்சம் மாமிசம் சாப்பிடமாட்டேன்.  உங்களுக்கு விருப்பமானதை சொல்லுங்கள் ஓடர் கொடுக்கிறேன்.  “ எனச்சொல்லிவிட்டு, சர்வரை அழைத்து ஜீவா கேட்டவற்றை வரவழைத்துவிட்டு, அய்யா, இருந்து சாப்பிடுங்கள்.  எனக்கு பக்கத்தில் ஒரு சின்ன அலுவல் இருக்கிறது. சென்று விரைவில் வருகிறேன்  “ எனச்சொல்லிவிட்டு அகன்றுள்ளார்.

அந்த பிராமண இளைஞனால்  அங்கு பரவியிருந்த மச்சம் – மாமிச கவிச்சி வாடையை சகிக்கமுடியாது.

ஜீவாவையும் விட்டு நகர முடியாது.  பக்கத்தில் செல்வதாக பொய் சொல்லிவிட்டு, வெளியே வந்து அந்த விடுதி வாசலில் காத்து நின்றார்.

சில நிமிடங்களில் வந்து ஜீவா உணவருந்தி முடிந்த பின்னர், அதற்குரிய பணத்தை செலுத்திவிட்டு, மீண்டும் ஜீவாவை தனது வீட்டுக்கு அழைத்துச்சென்றார்.

மேத்தாதாசனிடம் ஒரு மோட்டார் சைக்கிள் இருந்தது. நான் சென்னைக்கு சென்ற சந்தர்ப்பங்களிலும் அவர் என்னை அதில் இருத்தி அழைத்துச்சென்றிருக்கிறார்.
அன்றும் ஜீவாவை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டுதான் சென்னையையும் காண்பித்தார். அவ்வாறு இருவரும் அந்த மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது, 1987 ஆம் ஆண்டு சாலை விபத்தில் கொல்லப்பட்ட எழுத்தாளர் **சுப்பிரமணிய ராஜூ** பற்றியும் மேத்தா தாசன் நினைவுபடுத்தியதுடன், அந்த விபத்து நடந்த இடத்தையும் ஜீவாவுக்கு காண்பித்தார்.

அப்போது ஜீவா, அவரிடம் " தம்பி... நீயும் கவனம் ராசா... வேகமாக மோட்டார் சைக்கிளை ஓட்டாதே. " என்று தந்தையின் பரிவோடு சொல்லியிருக்கிறார். சுப்பிரமணிய ராஜூ இறந்து நான்கு வருடகாலத்தில், ஜீவா புத்திமதி சொன்ன மேத்தாதாசனும் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஒரு சாலை விபத்தில் கொல்லப்பட்டார்.

மேத்தாதாசனின் திடீர் மறைவினால் ஜீவா கலங்கிவிட்டார். அந்த இழப்பின் துயரத்தை ஜீவா கடப்பதற்கு சிரமப்பட்டவேளையில்தான், அந்த நல்ல ஆத்மாவின் சிறப்பியல்புகளை என்னிடம் தெரிவித்தார்.

## அய்ரோப்பிய இதழும் சாதி அகம்பாவமும்

ஈழத்தமிழர்கள் கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் அய்ரோப்பிய நாடுகளுக்கு புலம்பெயர்ந்த பின்னர் இங்கிருந்தெல்லாம் பல பத்திரிகைகள் , இலக்கிய இதழ்கள் வெளிவந்தன.

1990 களில் அய்ரோப்பியாவிலிருந்து வெளிவந்த ஒரு வார இதழின் ஆசிரியர் கடிதம் மூலம் தொடர்புகொண்டு கலை, இலக்கியப்புதினங்களை தமது இதழுக்கு எழுதுமாறு கேட்டுக்கொண்டார்.

அந்த இதழின் ஆசிரியர் இலங்கையில் எனக்கு அறிமுகமானவர். அத்துடன் எமது குடும்ப நண்பராகவும் திகழ்ந்தார்.

அத்துடன் நான் வீரகேசரியிலும் அவர் மற்றும் ஒரு பத்திரிகையிலும் துணை ஆசிரியர்களாக பணியாற்றினோம். விதி அவரை முதலில் அய்ரோப்பாவுக்கும் என்னை பின்னாளில் அவுஸ்திரேலியாவுக்கும் அனுப்பிவைத்துவிட்டது.

மின்னஞ்சல் தொழில் நுட்ப வசதி இல்லாத அக்காலப்பகுதியில் அந்த நண்பர் கடிதம் எழுதிக்கேட்டவாறு வாராந்தம் கலை , இலக்கியப்புதினங்களை எழுதி தபாலில் அனுப்பிக்கொண்டிருந்தேன். அவரும் வாராந்தம் குறிப்பிட்ட இதழ்களை தபாலில் அனுப்பினார்.

ஒரு இதழில், " யாழ்ப்பாணத்தில் போர் நெருக்கடிக்கு மத்தியிலும் காகிதாதிகளின் தட்டுப்பாடு நிலவிய சூழலில் ஜீவா, மல்லிகை இதழ்களை பாடசாலை அப்பியாசக்கொப்பித்தாளில் அச்சிட்டு, ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு பாடுபடுகிறார் " என்ற குறிப்பினை எனது பத்தியில் எழுதியிருந்தேன்.

அதற்கு அடுத்தவாரம் வந்த இதழில், ஒரு வாசகர், சாதி அகம்பாவத்துடன், ஜீவாவை கேவலப்படுத்தி, ( அந்த வார்த்தைகளை நான் இங்கே எழுத விரும்பவில்லை ) எனது பதிவுக்கு எதிர்வினையாற்றியிருந்தார்.

அதனைப்படித்தவுடன் நான் வெகுண்டேன். கடும்கோபத்துடன், தாமதிக்காமல் குறிப்பிட்ட இதழின் ஆசிரியரை தொலைபேசியில் அழைத்து எனது கண்டனத்தை தெரிவித்ததுடன், " இனிமேல் உமது இதழில் எழுதவே மாட்டேன் " எனச்சொல்லிவிட்டு. தபாலில் எனது கோபத்தை கொட்டி கடிதமும் எழுதினேன். அதில், இனிமேல் உமது இதழை எனக்கு தபாலில் அனுப்பவும் வேண்டாம் " என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

இதனால் நிலைகுலைந்துபோன அவர், மன்னிப்புக்கேட்டு கடிதம் எழுதியதுடன், தனது கவனக்குறைவினால் அந்த வாசகர் கடிதம் வெளிவந்துவிட்டது என்று சமாதானம் சொன்னர்.

தொலைபேசியிலும் தொடர்புகொண்டு மன்னிப்புக்கோரினார். இனிமேல் அவருடனோ, அவரது இதழுடனோ எந்தவித தொடர்பும் வைத்திருப்பதில்லை என்பதில் நான் மிகவும் பிடிவாதமாக இருந்தேன்.

அவரது மற்றும் ஒரு இதழில், நிகழ்ந்த தவறுக்கு வருந்துவதாகவும் குறிப்பு எழுதியிருந்தார்.

அப்படியிருந்தும் சில வருடங்கள் அவருடன் நான் எந்தத்தொடர்பையும் பேணவில்லை. அவரது மனைவிக்கு என்னை நன்கு தெரியும். அவர் மூலமாகவும் என்னிடம் மன்னிப்பு கேட்டிருந்தார்.

நாட்கள் கடந்தன. 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி, ஜீவா அய்ரோப்பாவில் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி முதலான நாடுகளுக்கு ஒருமாத காலம் இலக்கியச்சுற்றுலா சென்றார்.

அய்ரோப்பாவில் நீண்டகாலமாக இலக்கிய சந்திப்பு ஒன்று கூடலை நடத்திவரும் கலை, இலக்கியவாதிகள் ஜீவாவை தமது விசேட விருந்தினராக அழைத்திருந்தனர்.

அந்தப்பயணத்தின்போது, நான் மேலே குறிப்பிட்ட இதழின் ஆசிரியரும் தமது நாட்டிற்கு ஜீவா வந்ததும் சென்று சந்தித்து, " தனது இதழில் உங்களைப்பற்றி வந்த எதிர்வினையால், முருகபூபதி என்னுடான நட்புறவை முறித்துக்கொண்டார். என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். மீண்டும் எமக்கிடையே நட்புறவு மலர்வதற்கு நீங்கள்தான் ஆவனசெய்யவேண்டும் " என்று மன்றாடியிருக்கிறார்.

நான் ஜீவாவை 1997 இல் இலங்கையில் சந்தித்தபோது அந்த விவகாரம் பற்றியும் சொல்லியிருந்தபோது, ஜீவா எதுவும் பேசாமல் சிரித்தார்.

அவ்வாறே அந்த இதழாசிரியர் தனது வருத்தத்தை காலம் கடந்து அய்ரோப்பாவில் சொன்னபோதும் ஜீவா எதுவும் சொல்லாமல் சிரித்திருக்கிறார்.

மீண்டும் மீண்டும் அந்த இதழ் ஆசிரியர் எங்களுக்கிடையில் ஜீவா ஒரு சமாதானத் தூதுவனாகவேண்டும் எனச் சொன்னதும், ஜீவா, " ஐஸே.... நீரும் எனது நண்பன். அவரும் எனது நண்பன். பிரச்சினை உங்கள் இருவருக்கும்தான். அதில் நான் சம்பந்தப்பட்டிருந்தாலும், பிரச்சினை உங்களிருவரிடமிருந்தும்தான் தொடங்கியிருக்கிறது. நீங்கள் இருவருமே பேசித்தீர்த்து சமாதானமாகிவிடுங்கள். என்னைப்பற்றி வரும் எந்தவொரு எதிர்வினைகளும் விமர்சனங்களும் என்னை எதுவும் செய்துவிடாது. நான்

பாஷாணத்தில் புழுத்து புழு  என்பது தெரியும்தானே..!  " என்று சொல்லியிருக்கிறார்.

இந்தச்செய்தியை 2005 ஆம் ஆண்டு நான் இலங்கை சென்ற சமயம் மல்லிகைப்பந்தல் சார்பில் ஜீவா எனக்கு வழங்கிய தேநீர் விருந்தின்போது தெரிவித்தார்.

---

இந்த அங்கத்தில் ஜீவா சம்பந்தப்பட்ட இரண்டு குறிப்புகளை பார்த்தீர்கள்.  இந்த இரண்டு குறிப்புகளுக்குமிடையில் ஒரு மெல்லிய ரேகை இழையோடுகிறது.

சென்னையில், தமிழகத்தைச்சேர்ந்த ஒரு பிராமண வகுப்பினைச்சேர்ந்த இளைஞன், ஜீவாவை எப்படிப்பார்க்கிறான்..?

அய்ரோப்பாவுக்கு புலம்பெயர்ந்த பின்னரும்  ஈழத்தின் வடபுலத்து மேல்சாதிக்காரன்  ஜீவாவை எப்படிப்பார்க்கிறான்...?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் இடையில் தெளிவை தேடுங்கள் !

இது இவ்விதமிருக்க, அய்ரோப்பாவிலிருந்து வெளிவந்த **உயிர்நிழல்** ( 2001 ஜனவரி – பெப்ரவரி )  இதழில் ஜீவா சொன்னதை அவரது வார்த்தைகளிலேயே இங்கு பதிவுசெய்கின்றேன்.

 " தனக்கு கூடத் தெரியும் என்கிறது ஒருவகையான இலக்கிய மிரட்டல். உன்னைவிட எனக்குத் தெரியும் என்று சொல்கிறதிலை, ஒரு அகம்பாவம். எத்தனை தத்துவங்கள் வந்தது...? ஆனால், மனிதன் மனிதனாய் இருக்கிறது என்கிற தத்துவம்தான் உலகத்தில் ஆகச்சிறந்தது. மனிதன் மனிதனாய் மனிதப் பண்போடும், மனித நேசத்தோடும் பக்கத்திலுள்ளவனுடன் அன்பு செலுத்துகிறதுடன், அவனுடைய நல்வாழ்வுக்காகத் தன்னுடைய வாழ்வில் ஒரு பகுதியை ஒப்படைக்கிறதோடு இருக்கவேணும். என்னதான் ஆயிரம் தத்துவத்தைச்சொல்லி என்ன – இந்த ஒரு நாலைஞ்சு வரிக்குள்ளைதான் இவ்வளவு தத்துவங்களும் அடங்குது.  "

**----0---**

## கொள்கை முரண்பாடும் பகை மறப்பும்

எழுத்தாளர்களுக்கிடையில் நட்பும், பகைமையும், ஊடலும்-கூடலும் உரசலும் தவிர்க்கமுடியாத அம்சங்கள். கொள்கை , கருத்தியல் ரீதியாக உருவாகும் முரண்பாடுகளுக்கும் காழ்ப்புணர்வின் நிமித்தம் தோன்றும் பகைமைக்கும் வித்தியாசம் இருக்கிறது.

எழுத்தாளர்களுக்கிடையே இந்த முரண்பாடுகளின் தோற்றுவாய் சிவபெருமானும், நக்கீரனுக்கிடையில் வந்த வாதம்தான்.

பாண்டிய மன்னனின் மனைவியின் கூந்தலின் மணம் இயற்கையா..? செயற்கையா..? என்பதில் தொடங்கி சிவனின் வன்முறையில் ( நெற்றிக்கண்ணால் ) முடிந்த கதை.

" பிறர் மனைவியின் கூந்தலை முகர்ந்து பார்க்கும் பழக்கம் தனக்கில்லை " என்று புலவன் நக்கீரன் திருப்பிக் கேட்டிருந்தால், கதையே வேறுவிதமாக மாறியிருக்கும் !

எங்கள் எழுத்தாளர்களின் மத்தியில் தோன்றிய கருத்து முரண்பாடுகளுக்கு சித்தாந்தங்களும் கருத்தியல்களும் தனிப்பட்ட விருப்பு – வெறுப்புகளுமே பிரதான காரணமாக அமைந்தன !

மல்லிகை ஜீவா, சார்ந்திருந்த இடதுசாரி இயக்கத்தினுள்ளேயே அவருக்கும் ஒரு சிலருக்கும் இடையில் கோபதாபங்கள் நீடித்திருக்கிறது.

கொழும்பில் **C. T. O.** வில் பணியாற்றிய தோழர் பரராஜசிங்கம் நயினாதீவைச்சேர்ந்தவர். மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகித்தவர். தோழர் வி. பொன்னம்பலம்,

பின்னாளில் தினகரன் ஆசிரியரான சிவா. சுப்பிரமணியம் ஆகியோரின் நெருங்கிய சகா.

பரராஜசிங்கமும், மகாவலி அபிவிருத்தி அமைச்சில் பணியாற்றிய சிவா. சுப்பிரமணியமும் புறக்கோட்டையில் வடபுலத்து வர்த்தகரின் மொத்த விற்பனை நிலையத்தின் மேல்மாடியில் தங்கியிருந்து கடமைக்கு சென்று வந்தவர்கள்.

பரராஜசிங்கத்தை, நாம் **பரா** என்றும் சிவாசுப்பிரமணியத்தை **சிவா** என்றும் அழைப்போம். தோழர் வி. பொன்னம்பலம் **வி.பி.** என அழைக்கப்படுவார்.

காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தந்தை செல்வநாயகத்தைத எதிர்த்து போட்டியிட்ட தோழர் வி.பி. க்கு ஆதரவாக நடந்த பிரசாரக்கூட்டங்களில் இவர்களுடன் மல்லிகை ஜீவாவும் தேர்தல் பிரசாரக்களத்தில் இறங்கினார்.

தமிழரசுக்கட்சியினர், அந்தத் தேர்தலில் தோழர் வி. பி. கட்டுப்பணம் இழக்கவேண்டும் என்பதற்காக தீவிரமாக பிரசாரம் செய்தனர்.
எனினும், வி. பி. கட்டுப்பணத்தை இழக்காமல் கணிசமான வாக்குகளை அந்த இடைத்தேர்தலில் பெற்றார்.

பரராஜசிங்கம் எங்கள் ஊரில் நடந்த மல்லிகை பத்தாவது ஆண்டு மலர் அறிமுக நிகழ்விலும் கலந்துகொண்டவர். இவருடன் அன்றைய கூட்டத்தில் கவிஞர் முருகையனும் பேசினார்.

மல்லிகையில் வெளிவரும் ஜீவாவின் ஆசிரியத்தலையங்கங்கள் தொகுக்கப்பட்டு தனி நூலாக வெளிவரவேண்டும் என்ற யோசனையை அன்றைய தினம் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

அதன்பின்னர் சில ஆண்டுகள் கடந்து அந்த நூல் **தலைப்பூக்கள்** என்ற பெயரில் வெளிவந்தது.

1974 இல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகம் உருவானபோது, அதன் தலைவராக பேராசிரியர் கைலாசபதி நியமனமானது தீவிர தமிழ்த்தேசியவாதிகளுக்கு திருப்தி தரவில்லை.

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக்கல்லூரி, அவ்வாறு பல்கலைக்கழக வளாகமாக மாற்றப்பட்டதை கண்டிக்கும்

தோரணையில் கோவை மகேசன் சுதந்திரன் ஏட்டிலும் விஷம் கக்கினார்.

வித்தியானந்தனின் ஆதரவாளர்கள், " தலை இருக்க வால் ஆடிவிட்டது " என்றும் விமர்சித்தனர். வித்தியானந்தனின் மாணவரான கைலாசபதி அந்தப் பதவியைப்பெற்றதை அவர்களினால் பொறுக்கமுடியவில்லை.

ஆனால், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் வரவேண்டும் என்று தொடர்ந்து ஆசிரியத்தலையங்கம் வாயிலாக எழுதிய மல்லிகை ஜீவா, வந்த பின்னரும் வரவேற்று எழுதினார்.

அவரது சந்திப்பு மையமாகவும் பல்கலைக்கழகம் திகழ்ந்தது.

ஜீவா, இரண்டு பேராசிரியர்களையும் நேசித்தார். அரசியல் அலைப்பறைகளுக்குள் சிக்காமல், அவர்கள் இருவரிடமும் அன்பு பராட்டினார். 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கைலாசபதி கொழும்பில் திடீரென மறைந்ததும் ஜீவா யாழ்ப்பாணத்திலிருந்து பதறியடித்துக்கொண்டு ஓடிவந்தார்.

பின்னாளில் கைலாசபதியின் பன்முக ஆற்றல்களையும் வெளிப்படுத்தும் **எங்கள் நினைவுகளில் கைலாசபதி** என்ற தொகுப்பு நூலையும் மல்லிகைப்பந்தல் சார்பாக வெளியிட்டார்.

அதில் முதலாவது கட்டுரை பேராசிரியர் வித்தியானந்தனுடையது.

இது இவ்விதமிருக்க, தனது அரசியல் அணியிலிருந்த தோழர்கள் வி. பி., பரராஜசிங்கம், சிவா. சுப்பிரமணியம் ஆகியோரிடத்தில் ஜீவா பிற்காலங்களில் முகம்கொடுத்தும் பேசுவதை முற்றாக தவிர்த்தார்.

ஸ்ரீமா அம்மையாரின் கூட்டரசாங்கத்தில் வீடமைப்பு அமைச்சராக இருந்த தோழர் பீட்டர்கெனமன், தமது அமைச்சிற்கு முன்பாக அமைந்த **C. T. O.** வில் பணியாற்றிய பரராஜசிங்கத்தை நேரில் அழைத்து, யாழ்ப்பாணம் கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபன கிளைக்கு முகாமையாளராக்கும் நியமனம் கடிதம் வழங்கினார்.

பராவின் பணி , தபால், தந்தி அமைச்சர் செல்லையா குமாரசூரியரின் கீழ் வருகிறது. தனது அனுமதி இல்லாமல்

பீட்டர்கெனமன் எவ்வாறு பராவுக்கு மற்றும் ஒரு புதிய நியமனம் கொடுக்கமுடியும் என்ற கோபத்தில் சூரியர் பராவை யாழ்ப்பாணம் செல்வதற்கு  அனுமதிக்கவில்லை.

இந்த இழுபறியினால், பரா மனமுடைந்திருந்தார்.  அவருக்கு ஊரோடு உத்தியோகம் கிடைக்கவிருந்தது.

அதனால் பராவிடம் சில நாட்கள் குடியிருந்த விரக்தியை பார்த்த, மல்லிகை ஜீவாவுக்கு சற்று கோபமும் வந்தது.
“பதவிச்சுகம் தேடியா நாம் இந்த அரசியலுக்கு வந்தோம். கிடைத்தால் கிடைக்கட்டும் கிடைக்காவிட்டால்,  தலையா முழுகிவிடும்  ” என்று பேசிவிட்டார். அத்துடன்  எங்கள் இடதுசாரி அரசியல் மக்கள் தொண்டில்தான் கலந்திருக்கிறது. அரச பதவிகளில் அல்ல  ” என்றும் சொன்னார்.

பின்னர் எப்படியோ,  பராவுக்கு யாழ்ப்பாணத்தில் அவரும் விரும்பிய **( B. M. C. Manager )** முகாமையாளர் நியமனம் கிடைத்தது.

அக்காலப்பகுதியில்  சிறுபான்மை இனத்தைச்சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படும்  அரச நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகளில், அமைச்சர்கள் பீட்டர், சூரியர் , பதியூதீன் ஆகியோருக்கிடையில் கருத்தொற்றுமை இருக்கவில்லை என்பதை ஜீவா உட்பட  நாம் நன்கு அறிந்திருந்தோம்.

பீட்டர், சூரியர் ஆகியோரின் அரசியல் அணுகுமுறையினால் அதிருப்பதியடைந்த தோழர் வி. பொன்னம்பலம்  **செந்தமிழர் இயக்கம்** என்ற புதிய அமைப்பினை உருவாக்கினார்.  அதில் பராவும், சிவாவும் முக்கிய பேச்சாளர்களாக மாறினர்.

இதனால், கோபமுற்ற ஜீவா, இம்மூவருடனும் முகம்கொடுத்து பேசுவதையும் முற்றாக தவிர்த்தார். சிவா தவிர்ந்து ஏனைய இருவருடனும் ஜீவா இறுதிவரையில் பேசவேயில்லை.

காலம் மாறியது. வி.பி,  அமிர்தலிங்கத்துடன் நெருக்கமாகி தமிழர் விடுதலைக்கூட்டணியில் ஐக்கியமானார். பரராஜசிங்கம் கனடாவுக்கு புலம்பெயர்ந்தார். காலப்போக்கில் வி.பி.யும் கனடா சென்றார்.

தீவிர இடதுசாரி அரசியல் பேசிய பரராஜசிங்கம் கனடாவில் துறவியாக  மாறி காவியுடுத்து ஆசிரமம் அமைத்து

ஆன்மீகப்பணிகளில் ஈடுபட்டு, சில வருடங்களுக்கு முன்னர் இந்தியா சென்றபோது மறைந்தார்.

சிவா. சுப்பிரமணியம் அரசியல் பத்தி எழுத்துக்களை அந்திம காலத்தில் எழுதிக்கொண்டிருந்துவிட்டு, யாழ்ப்பாணம் கோண்டாவிலில் மறைந்தார்.

வி.பி, கனடாவில் ஒரேற்றர் சுப்பிரமணியம் நினைவரங்கில் உரையாற்றிக்கொண்டிருந்தபோது, மாரடைப்பு வந்து மேடையிலேயே உயிர் துறந்தார்.

## எஸ்.பொ.வும் ஜீவாவும்

ஜீவா, மல்லிகை இதழை ஆரம்பிக்க முன்பிருந்தே சிறுகதைகள் எழுதத் தொடங்கியவர். இவர் எழுதிக்கொண்டிருந்த காலத்தில் கே. டானியலும் எழுதினார்.

இம்மூவரதும் கதைகள் அக்காலத்தில் **சுதந்திரன்** இதழில் வெளிவந்தன. மூவரும் ஒற்றுமையாகத்தான் செயல்பட்டனர்.

இவர்கள் மூவரும் இடதுசாரிச்சிந்தனைகளால் ஆகர்ஷிக்கப்பட்டிருந்தமையால், எஸ். பொ., **புரட்சிப்பித்தன்** என்ற புனைபெயரிலும் டானியல் **புரட்சி தாசன்** என்ற பெயரிலும் ஜீவா **புரட்சி மோகன்** என்ற பெயரிலும் அவரவர் எழுத்துப்பிரதிகளில் வலம் வந்தனர். சர்வதேச அரங்கில் இந்தப் புரட்சிக்கு வந்த சோதனையால் ( ?) , மூவரும் வெவ்வேறு அணிக்குள் ஐக்கியமானார்கள்.

இம்மூவரில் எஸ்.பொ. மாத்திரம் மெத்தப்படித்தவர். சென்னை சென்று தாம்பரம் கிறிஸ்தவ கல்லூரியில் பட்டம் பெற்றுத் திரும்பி ஆசிரியராக அரச உத்தியோகம் பார்த்தவர்.

டானியல் பல சிறிய தொழில்களையெல்லாம் செய்துவிட்டு, இறுதியில் யாழ். வெலிங்டன் தியேட்டருக்கு அருகில் ஸ்டார் கராஜ் என்ற நிறுவனத்தை சொந்தமாக நடத்தினார்.

ஜீவா, கஸ்தூரியார்வீதியில் தமது தந்தையாரின் ஜோசப் சிகையலங்கார நிலையத்தில் தனது வேலையை கைவிட்டு, முழு நேர இதழாசிரியரானார்.

இம்மூவரும் எழுதத்தொடங்கிய காலப்பகுதியில், எஸ்.பொ. அதிகம் படித்திருந்தமையால், ஜீவா – டானியலின் கதைகளில்

எழுத்துப்பிழைகளை திருத்துவதிலும் செம்மைப்படுத்துவதிலும் உதவியிருக்கிறார்.

எஸ்.பொ. வும் தனது படைப்புகளை அச்சில் பார்ப்பதற்கு முன்னர் இளம்பிறை ரஃமானிடம் காண்பிப்பது வழக்கம். பரஸ்பரம் நேசிக்கும் இலக்கிய நண்பர்கள் தமது படைப்புகள் வெளிவருமுன்னர் ஒருவருக்கொருவர் காண்பித்து கருத்துக்கேட்பதும், மேலும் செம்மைப்படுத்துவதும் இயல்பு.

அத்தகைய நம்பிக்கையுடன்தான் ஜீவாவும் டானியலும் தமது எழுத்துக்களை சக நண்பரான எஸ்.பொ.விடம் காண்பித்துள்ளனர்.

மனிதர்களுக்கு அவரவர் இயல்புகள்தான் அடிப்படை அழகு. அந்த அழகினை வெளிப்படுத்த நேர்ந்தமையால், இம்மூவருக்கும் மத்தியில் ஊடலும், கூடலும் உரசலும் நேர்ந்தது.

எஸ்.பொ. எப்பொழுதும் அதிரடியாக கருத்துச்சொல்பவர். பின்விளைவுகளைப்பற்றி யோசிக்கமாட்டார்.

சில நேர்காணல்களில், தான் பலருக்கும் எழுதிக்கொடுத்ததாகவும், அவர்களில் ஜீவாவும் டானியலும் அடக்கம் என்றும், அத்துடன் தான் பல புனைபெயர்களில் எழுதியிருப்பதாகவும் அவற்றில் டொமினிக் ஜீவா, டானியல் முதலான பெயர்களும் அடக்கம் என்று சொல்லத் தொடங்கிவிட்டார்.

இதனால் ஜீவா வெகுண்டு, அந்த நேர்காணல்களை எழுதிய ஊடகவியலாளர்களுடனும் கோபித்துக்கொண்டு சிறிது காலம் முகம்கொடுத்தும் பேசவில்லை.

ஆனால், டானியல் கோபப்படாமல் அமைதியாக சிரித்துக்கொண்டிருந்தார்.

" தான் நீண்ட காலமாக எஸ்.பொ. வை காணவேயில்லை. இன்றும் நான் எழுதிக்கொண்டிருக்கின்றேன். இப்பொழுதும் பொன்னுத்துரையா எனக்கு எழுதித்தருகிறார்..? " என டானியல் கேட்டார்.

பல இலக்கியவாதிகளினதும் முகங்களும் மல்லிகை முகப்பில் வெளிவந்தாலும், மிகவும் காலம் தாழ்த்தியே எஸ்.பொ. வின் படம் மல்லிகை அட்டையில் வந்தது.

எஸ்.பொ.வுக்கும் ஜீவாவுக்கும் மத்தியில் கூடல் வரும்போது, ஜீவா – எஸ்.பொ. வுக்கு தேநீரும் சிகரட்டும் வாங்கிக்கொடுப்பார்.

எஸ்.பொ.வின் மூத்த புதல்வன் ( மருத்துவர் ) அநுரா மீது ஜீவா மிகுந்த நேசம்கொண்டிருந்தவர்.
சென்னையில் அநுராவின் ஏற்பாட்டில் மித்ர பதிப்பகம் நடத்திய விழாவில் ஜீவா அழைக்கப்பட்டு, பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அதில் ஜீவா ஏற்புரை வழங்கும்போது, " எஸ். பொ. வின் மிகச்சிறந்த படைப்பு அநுராதான் என்றும் சொன்னார்.

நான் இலங்கை செல்லும்வேளைகளில் ஜீவா மறக்காமல் கேட்பவர்களில் ஒருவர் எஸ்.பொ.

எஸ்.பொ. அவுஸ்திரேலியா சிட்னியில் கடந்த 2014 ஆம் ஆண்டு மறைந்ததும், இலங்கையில் முதலில் இந்தத்தகவலை ஜீவாவுக்கே சொன்னேன்.

மறுமுனையில் ஜீவாவிடமிருந்து நீண்ட மௌனம் நிலவியது. அதன்பிறகு ஜீவாவை கொழும்பில் சந்தித்தபோது, " எஸ். பொ. எப்படி இருக்கிறார்..? " என்று கேட்டார். அக்காலப்பகுதிதான் ஜீவா படிப்படியாக நினைவுகளை மறக்கத்தொடங்கிய வேளை !

இந்தப்பத்தியில் சொல்லப்பட்ட கைலாசபதி, வித்தியானந்தன், தோழர்கள் வி. பொன்னம்பலம் , பரராஜசிங்கம், சிவா. சுப்பிரமணியம், டானியல், எஸ்.பொ. ஆகியோர் ஜீவாவுக்கு முன்னரே மறைந்துவிட்டனர்.

ஜீவா, நிதானமாக அவர்களைப் பின்தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி அமைதியாக விடைபெற்றார். ஏனையோர் நிரந்தரமாக விடைபெறும்போது பலரும் திரளாகவும் குறைந்த எண்ணிக்கையிலும் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்தினர்.

ஜீவா மற்றவர்களுக்கு அந்த அலைச்சல் வேலையையும் வைக்காமல், புறப்பட்டார்.

மகாகவி பாரதி மறைந்து சுடுகாடு செல்லும்போது விரல்விட்டு எண்ணத்தக்கதாக ஒரு சிலர்தான் உடன் வந்தனர்.

கொரோனோ காலத்தில், ஜீவா - கொழும்பில் மின்மயானத்தில் தகனமாகும்போது ஒரே ஒரு ஜீவன்தான் அவரது பூதவுடல் தாங்கிய பேழையை பார்த்துக்கொண்டு நின்றது.

அந்த ஜீவன், ஜீவாவின் ஏக புதல்வன் **திலீபன்.**


பட்டினத்தாரின் சிந்தனையின் அடிப்படையில் கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகள் நினைவுக்கு வருகின்றன!

**ஆடிய ஆட்டமென்ன…?**
**பேசிய வார்த்தை என்ன…?**
**தேடிய செல்வமென்ன? திறண்டதோர் சுற்றமென்ன…?**
**கூடுவிட்டு ஆவிபோனால் கூடவே வருவதென்ன…?**


**வீடுவரை உறவு**
**வீதி வரை மனைவி**
**காடு வரை பிள்ளை**
**கடைசி வரை யாரோ…?**


மல்லிகை ஜீவா எம்மத்தியில் நினைவுகளாக வாழ்ந்துகொண்டேயிருப்பார்.


**---0---**





ஒளிப்படங்களில் மல்லிகையும் ஜீவாவும்

















எழுதப்படாத கவிதைக்கு
வரையப்படாத சித்திரம்
டொமினிக் ஜீவா



பாதுகை
டொமினிக் ஜீவா
தமிழ்ப் புத்தகாலயம்


பட்டம் மறுதலிப்பும்
பல்வேறு சர்ச்சைகளும்
தொகுத்தவர் : மேமன்கவி



மூன்முகங்கள்
டொமினிக் ஜீவா





மல்லிகை ஜீவா
சிறப்புப் பக்கங்கள்



டொமினிக் ஜீவா-
கருத்துக் கோவை


கலசம்















முற்போக்குப் படைப்பாளிகள் (1959 அல்லது 1960 இல் எடுக்கப்பட்ட புகைப்படம்)
(இருப்பவர்கள் இ-வ) 1. வி. ஏ. கந்தசாமி 2. டானியல் 3. முருகையன் 4. கனக செந்தில்நாதன்
5. இளங்கீரன் 6. செ. கணேசலிங்கன்


(நிற்பவர்கள் இ-வ) 1. டொமினிக் ஜீவா 2. பசுபதி (யாழ்ப்பாணக் கவிராயர்) 3. மாணிக்கவாசகர்
4. நீர்வை பொன்னையன் 5. அம்பி 6. தம்பிராஜா 7. நாவேந்தன்











அறந்தை நாராயணன், குணசேகரன், ஜீவா, முருகபூபதி மல்லிகை அச்சுக்கோப்பாளர் சந்திரசேகரம்



மல்லியப்பு திலகரும் மல்லிகை ஜீவாவும்




இலக்கியவாதிகளுடன் மல்லிகை ஜீவா





நீர்கொழும்பில்  அ.மயில்வாகனன் தலைமையில் 1997 இல் மல்லிகை ஜீவா கௌரவிக்கப்பட்ட நிகழ்வு. துரைவிசுவநாதன், பிரேம்ஜி, வன்னியகுலம், ராஜஸ்ரீகாந்தன், மேமன்கவி, தனபாலசிங்கம், இளையதம்பி தயானந்தா, சிவநேசச்செல்வன், வதிரி சி. ரவீந்திரன், தங்கவடிவேல் மாஸ்டர், தெளிவத்தை ஜோசப், நீர்கொழும்பூர் முத்துலிங்கம்,  திக்குவல்லை கமால், மு. பஷீர், ‘ ‘நவமணி  ’ சிவலிங்கம், சூரியகுமாரி பஞ்சநாதன், தருமலிங்கம் ஆகியோருட்பட பலர் கலந்துகொண்ட பெருவிழா.










அவுஸ்திரேலியா மெல்பனில்

**2021 டிசம்பரில் நடந்த மல்லிகை ஜீவா நினைவரங்கு.**





" திட்டோ பாராட்டோ நான்

கவனிக்கப்படுகின்றேன் "

– டொமினிக் ஜீவா

## முருகபூபதியின் இதர நூல்கள்

### சிறுகதை

சுமையின் பங்காளிகள் **( தேசிய சாகித்திய விருது பெற்றது 1976 )**

சமாந்தரங்கள் - வெளிச்சம் - எங்கள் தேசம் - கங்கை மகள்

நினைவுக்கோலங்கள் – கதைத் தொகுப்பின் கதை

### நாவல்

பறவைகள் **( தேசிய சாகித்திய விருது பெற்றது 2003 )**

**பயண இலக்கியம் :** சமதர்மப்பூங்காவில்

### கட்டுரை

நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள்

இலக்கிய மடல்

எம்மவர்

மல்லிகை ஜீவா நினைவுகள்

ராஜஸ்ரீகாந்தன் நினைவுகள்

அம்பி வாழ்வும் பணியும்

உள்ளும் புறமும்

நடந்தாய் வாழி களனி கங்கை

**சிறுவர் இலக்கியம்:** பாட்டி சொன்ன கதைகள்

**நேர்காணல் :** சந்திப்பு

**கடித இலக்கியம் :** கடிதங்கள்

**ஆய்வு:** இலங்கையில் பாரதி

### புனைவு சாராத இலக்கியம்

சொல்ல மறந்த கதைகள்

சொல்லவேண்டிய கதைகள்

சொல்லத்தவறிய கதைகள்

### சிங்கள மொழிபெயர்ப்பு

மதக்க செவனெலி **( Shadows of Memories )**



ஈழத்து நவீன இலக்கிய முன்னோடி மல்லிகை ஜீவா அவர்கள் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்திய முருகபூபதி, தான் அறிந்த மல்லிகை ஜீவாவிடம் கற்றதையும் பெற்றதையும் நனவிடை தோய்தலாக பதிவுசெய்திருக்கும் இந்நூல் பல ருசிகர சம்பவங்களின் கோர்வை.

ஐந்து தசாப்தங்களாக எழுதிச் செல்லும் முருகபூபதி, சிறுகதை, நாவல், பயண இலக்கியம், கட்டுரை இலக்கியம், சிறுவர் இலக்கியம், கடித இலக்கியம், நேர்காணல், புனைவு சாரா பத்தி இலக்கியம் என இலக்கியத்துறையின் எல்லாப் பக்கங்களையும் கடந்து பயணிப்பவர்.

வாசகரின் தோளில் கை போட்டு அழைத்துச் செல்லும் இவரது படைப்பு மொழியில் எளிய நடையையும், வார்த்தைச் சிக்கனத்தையும், நறுக்கென நயம்படச் சொல்லும் பாணியையும் காணலாம்.

இவையே இவரது எழுத்தின் சிறப்பு. ஆச்சரியக் குறிகளை அள்ளித்தெளித்து ஆரவாரம் தேடும் எழுத்துக்கள் அல்ல அவை.

இரு தடவைகள் இலங்கையில் தேசிய சாகித்திய விருது பெற்ற முருகபூபதி தனது மானசீக ஆசானுக்கு சமர்ப்பிக்கும் பொருத்தமான காணிக்கையே இந்நூல்!

**கிறிஸ்டி நல்லரெத்தினம்**